விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

**கல்யாண மாலை**
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 010 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 14 திங்கட்கிழமை (29.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## மருந்துப் பொருள் மாபியா இந்த அரசிலும் தொடர்கிறது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் காட்டம்



(கொழும்பு)

மருந்து மாபியாக்களை உடனடியாகக் கட்டுப்படுத்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். தரமற்ற மருந்துகளால் இடம்பெறும் உயிரிழப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

இது அரசாங் 02ஆம் பக்கம் பார்க்க

## பிரதம கணக்காய்வாளர் நாயகம் நியமனத்தில் தொடரும் இழுபறி

### ஐக்கிய மக்கள் சக்தி அதிருப்தி



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இதுவரை கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை நியமிக்கத் தவறியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

எதுல்கோட்டேயிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி 15ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் அமைச்சர் டக்ளஸுக்கு மறியல்

### ஏனைய துப்பாக்கிகள் குறித்தும் விசாரணை

(கம்பஹா)

கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை எதிர்வரும் 09 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீதிவான் 15ஆம் பக்கம் பார்க்க

- மின்சாரம்
- எரிபொருள்
- மருத்துவம்
- நீர்வழங்கல்
- வங்கி
- கழிவகற்றல்

# அத்தியாவசிய சேவைகளாக அறிவித்தார் ஜனாதிபதி

### அதிவிசேட வர்த்தமானி வெளியாகியது

*(கொழும்பு)*

மின்சாரம், எரிபொருள், சுகாதார சேவைகள், போக்குவரத்து, வீதிகள், நீர், உணவு, மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள், அம்புலன்ஸ், மத்திய வங்கி, அரச வங்கிகள் மற்றும் காப்புறுதி நடவடிக்கைகள், நீர்ப்பாசனம், தொலைபேசி, தொலைத்தொடர்பு மற்றும் ஊடகம், தாழ்நில அபிவிருத்தி, விவசாயம் மற்றும் விவசாயக் காப்புறுதி ஆகிய சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவால் அதிவிசேட வர்த்தமானி நேற்று (28) வெளியிடப்பட்டுள்ளது. *(02ஆம் பக்கம் பார்க்க)*

## அவசரகாலநிலை மீண்டும் நீட்டிப்பு

### விசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட பேரழிவைத் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்ட பொது அவசரகால நிலை தொடர்ந் 15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் சுற்றிவளைக்கப்பட்ட சட்டவிரோத விடுதிகள்

### எட்டுப் பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இயங்கிய சட்டவிரோத விடுதிகள் இரண்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிரடியாகச் சுற்றிவளைக்கப்பட்டதுடன் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கச்சேரி மற்றும் ஈச்சமோட்டைப் பகுதிகளிலேயே குறித்த விடுதிகள் யாழ்ப்பாணப் பொலிஸாரால் முற்றுகையிடப் 15ஆம் பக்கம் பார்க்க

## மின் ஒளியால் விமோசனம் பெற்றது கல்லுண்டாய்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்லுண்டாய்வெளியானது இரவு நேர பயணத்துக்கு சிம்மசொப்பனமாக இருந்து வந்த நிலையில் அதனைச் சீர் செய்யும் முயற்சிகளை வலி.மேற்கு பிரதேச சபை முன்னெடுத்துள்ளது.

கல்லுண்டாய் வீதியில் விபத்துக்கள், வழிப்பறிக் கொள்ளைகள் அதிகம் இடம்பெற குறித்த வீதியில் 15ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படமாட்டாது

### ராஜித சேனாரத்ன ஆரூடம்



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசின் வீழ்ச்சிப் பயணம் ஆரம்பித்துவிட்டது.

15ஆம் பக்கம் பார்க்க

## புதிய பயங்கரவாத தடைச்சட்டம் வெறும் கண்துடைப்பு மட்டுமே

### நிசாம் காரியப்பர் எம்.பி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

அரசாங்கத்தினால் தற்போது முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வெறும் கண்துடைப்பு மட்டுமே என்று பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார். 02ஆம் பக்கம் பார்க்க




## யாழ்.உள்ளக விளையாட்டரங்குக்கு ஒதுக்கிய நிதி திரும்பியது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ளக விளையாட்டு அரங்கினை நிர்மாணிப்பதற்காக அமைச்சினால் ஒதுக்கப்பட்ட சுமார் 169 மில்லியன் ரூபாய் நிதி செலவு செய்யப்படாமல் கட்டடங்கள் திணைக்களத்துக்கு மாற்றப்பட உள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை (26) யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் கலந்துரையாடலில் உள்ளக விளையாட்டு அரங்கு தொடர்பான 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வுநிலை அதிபர் பஞ்சலிங்கம் காலமானார்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் ஓய்வுநிலை அதிபர் அ.பஞ்சலிங்கம் நேற்று (28) தனது 89 ஆவது வயதில் காலமானார்.



மேற்படி இரண்டு கல்லூரிகளினதும் வளர்ச்சியில் அர்ப்பணிப்போடு செயலாற்றிய அ.பஞ்சலிங்கம் மிகச் சிறந்த அதிபராக விளங்கி சான்றாண்மை மிக்க மாணவர்களை உருவாக்குவதில் அர்ப்பணிப்போடு செயற்பட்டவர்.

அவரின் மறைவுக்குப் பலரும் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளனர். (ந)

# அதிபர் பஞ்சலிங்கத்தின் மறைவு கல்விச் சமூகத்திற்கு பேரிழப்பு

## வடமாகாண அதிபர்கள் சங்கம் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

ஓய்வுநிலை அதிபர் அ.பஞ்சலிங்கம் அவர்களின் மறைவு கல்விச் சமூகத்திற்குப் பேரிழப்பாகும்.

அவரின் மறைவிற்கு எமது சங்கம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இவ்வாறு ஓய்வுநிலை அதிபர் பஞ்சலிங்கத்தின் மறைவு குறித்து வடமாகாண அதிபர் சங்கம் விடுத்த இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது.

வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் ஜெ.கோகுலவாசன் விடுத்த அந்தச் செய்தியில், இக்கட்டான காலகட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் அதிபராக இருந்து அமைதியாகவும் அர்ப்பணிப்போடும் சேவையாற்றியவர் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-7)


## மலிவு விற்பனை

இன்றும் நாளையும் ஒரே விலையில் 2 பூங்கன்றுகள் வாங்கினால் ஒன்று இலவசம். (1862)

யாழ். சிற்றி பாம், 755, மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.
தொடர்புகளுக்கு: 075 944 4601

## கிழவன்காடு கலாமன்றம்

காரைநகர் - யாழ் கிளை நடாத்தும்
தெய்வீக கலையரங்கு
(திருவெம்பாவை 6 ம் நாள்)
அழைப்பிதழ்

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் : 30.12.2025 செவ்வாய்க்கிழமை பி.ப 4.00 மணி

நிகழ்ச்சிகள்

- மாணிக்கவாசகர் சுவாமிகள் மண்டபத்திற்கு எழுந்தருளல், தீபாராதனை
- வேதபாராயணம் - ஈழத்து வேதவிற்பன்னர்கள்
- திருவாசகம் ஓதல் :- "திருவாசகக்குயில்" காரை லீலாவதி இராசரத்தினம் (கலாமன்ற இசை ஆசிரியர்)
- இசைக்கச்சேரி :- திரு. தர்மலிங்கம் ரமணிகாந் குழுவினர்
- சொற்பொழிவு :- "அழுதால் உன்னைப் பெறலாமே" வழங்குபவர் :- "அறவழிநாயகன்" "கலாநிதி" ஆறு.திருமுருகன் அவர்கள்
- கௌரவிப்பு :- அரச ...டன தேசிய மட்டப் போட்டியில் 2ம் இடம் பெற்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியருக்கான கௌரவம்

சிறப்பு நிகழ்ச்சி

ஈழத்து இளங்கலைஞர்கள் இணைந்து வழங்கும்
"நிருத்தியார்ப்பணம்" - "நாட்டிய நிகழ்வு"

குறிப்பு : நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ். கிளையிலிருந்து (இல.428, K.K.S வீதி, வண்ணை சிவன் கோவில் அருகாமை) பி.ப 3.30 மணிக்கு ஆரம்பமாகும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர் - யாழ் கிளை (C-4690)


# நெடுந்தீவில் தமிழக மீனவர்கள் கைது விடுவிக்குமாறு ஜெய்சங்கருக்குக் கடிதம் வரைந்தார் தமிழக முதல்வர் ஸ்டாலின்

(சென்னை)

தமிழகத்தைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் நேற்று (28) இலங்கை கடற்படையினரால் நெடுந்தீவுப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தமிழ்நாட்டு மீனவர்கள் சிறைபிடிக்கப்படுவதைத் தடுக்கவும், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும் உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

நேற்று (28) அவர் எழுதியுள்ள அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழக மீனவர்களும் அவர்களது மீன்பிடிப் படகுகளும் இலங்கை அதிகாரிகளால் சிறைப்பிடிக்கப்படுவது தங்கு தடையின்றி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இக்கைது நடவடிக்கைகள் நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனவே எதிர்காலத்தில் இது போன்ற கைதுகள் நிகழாமல் தடுக்கவும் இலங்கையில் தடுப்புக் காவலில் உள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவிக்கவும் உரிய தூதரக வழிகளை உடனடியாக மேற்கொள்ள ஆவண செய்யவேண்டும் என அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ந-7)

## அத்தியாவசிய...

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொது சேவைகள் சட்ட விதிகளின்படி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இந்த வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இந்த அறிவிப்பு நேற்று 28ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை 2468/46 ஆம் இலக்க சிறப்பு வர்த்தமானி அறிவிப்பின் மூலம் வெளியிடப்பட்டது.

வர்த்தமானி அறிவிப்பின்படி மின்சாரம், எரிபொருள், பெட்ரோலிய பொருட்கள், எரிவாயு, வைத்தியசாலைகள், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் பிற ஒத்த நிறுவனங்களில் நோயாளிகளின் பராமரிப்பு, வரவேற்பு, ஊட்டச்சத்து மற்றும் சிகிச்சை தொடர்பான அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அம்புலன்ஸ் சேவைகள், பயணிகள் அல்லது பொருட்களைக் கொண்டு செல்வதற்கான பொதுப் போக்குவரத்து சேவைகள், நீர் வழங்கல் மற்றும் வடிகால் தொடர்பான அனைத்து சேவைகளும் இதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம், பாதுகாப்பு மற்றும் விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகளும் அனைத்து மாவட்டச் செயலகங்கள், பிரதேசச் செயலகங்கள் மற்றும் தொடர்புடைய கள மட்ட அலுவலர்களால் செய்யப்பட வேண்டிய அனைத்து சேவைகளும் தொடர்புடைய வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கி, நீர் வழங்கல், மின்சாரம், கழிவுநீர் அமைப்பு, தீயணைப்பு மற்றும் அம்புலன்ஸ் சேவைகள், சுத்திகரிப்பு மற்றும் உள்ளூர் அரசாங்க நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் கழிவு அகற்றல் உள்ளிட்ட அனைத்து அரச வங்கி மற்றும் காப்பீட்டு சேவைகளும் இதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. (ந-7)

## மருந்துப்...

கத்தின் முக்கிய பொறுப்பாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டு வரும் மூச்சுத் திட்டத்தின் கீழ் பதுளை மாவட்டம், மஹியங்கனை ஆதார வைத்தியசாலைக்கு 46.5 இலட்சம் ரூபா மதிப்புள்ள வைத்தியசாலை உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை (28) இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர்மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

சில வருடங்களுக்கு முன்பு, இந்நாட்டில் மிகவும் ஊழல் நிறைந்த மற்றும் தரமற்ற மருந்து மோசடி நடந்து கொண்டிருந்த வேளை, அதை நாட்டுக்கு வெளிக்கொணர்ந்து, அம்பலப்படுத்தி, அப்போதைய சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஐக்கிய மக்கள் சக்தியே கொண்டு வந்தது.

அப்போதுநடந்த இந்த தரமற்ற மருந்து மோசடிகள் புதிய அரசாங்கத்துடன் முடிவுக்கு வரும் என்றே கருதப்பட்டன. ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் கீழும் தரமற்ற மருந்து மாபியா தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் தரமற்ற தடுப்பூசிகளால் இரண்டு பெண்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். தரமற்ற தடுப்பூசிகள் மற்றும் மருந்துப் பொருட்கள் கொள்வனவு மோசடி இன்றும் நடந்து வருகிறது.

மருந்துப் பொருட்கள் மோசடியைத் தொடர்வதற்கு தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் ஆணை தரவில்லை.

இந்த மருந்துப்பொருள் மாபியாவால் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பரிதாபமாக பலியாகி வருகின்றன. மருந்துகள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் போது, அவை தரமானதா? நுகர்வுக்கு ஏற்றனவா? என தகுதிச் சான்றிதழ் வழங்கும் முன்னர், இந்த மருந்துகளின் தரம் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிசோதனைகள் மூலமும் சர்வதேச நிறுவனங்கள் மூலமும் இவை ஆராயப்பட வேண்டும்.

நமது நாட்டில் இன்னும் மருந்துகளின் தரத்தை சரிபார்க்கக்கூடிய பரிசோதனை ஆய்வு கூடமோ, வசதிகளோ இல்லை. இதற்கான ஆய்வு கூட வசதிகளை நாம் நிறுவ வேண்டும் என்றார். (ந-7)

## புதிய...

தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள ஒரு பதிவிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

'PTA' என்பதில் ஒரு 'S' எழுத்தினைச் சேர்த்து 'PSTA' எனப்பெயர் மாற்றியதைத் தவிர எந்த உண்மையான மாற்றமும் அதில் இல்லை. இது சீர்திருத்தம் அல்ல, மறு பெயரிடல் மட்டுமே.

ICCPR உடன்படிக்கையின் 9 மற்றும் 10 ஆம் பந்திகளில் உள்ள சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட உண்மையான சீர்திருத்தமே இலங்கைக்குத் தேவை என்றும் நிசாம் காரியப்பர் எம்.பி வலியுறுத்தியுள்ளார். (ந-7)


## வீட்டுப் பணிப்பெண் தேவை

வயோதிபப் பெண்ணொருவரை வீட்டில் தங்கி இருந்து பராமரிக்கக் கூடிய பெண் தேவை. (உணவு, தங்குமிட வசதி உண்டு). சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (1867)

077 880 8659
076 584 7149


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெள்ள அனர்த்தத்தால்

# விசேட தேவையுடைய 2200 பேர் பாதிப்பு

### தேசிய செயலகம் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு உள்ளிட்ட அனர்த்தங்களினால் சுமார் 2 ஆயிரத்து 200 விசேட தேவையுடையோர் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக விசேட தேவையுடையோருக்கான தேசிய செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த அனர்த்த நிலைமையினால் குறித்த தேவையுடையோர் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசிய உபகரணங்கள் மற்றும் உதவிச் சாதனங்கள் பெருமளவில் சேதமடைந்துள்ளதாக அந்தச் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் இவர்களின் இயல்பு வாழ்க்கை மேலும் சவாலுக்கு உள்ளாகியுள்ளது.

பாதிக்கப்பட்ட தேவையுடையோர் குறித்த விபரங்களை மாவட்ட ரீதியாகச் சேகரிக்கும் பணிகளைத் தேசிய செயலகம் தற்போது ஆரம்பித்துள்ளது.

சேதமடைந்த உபகரணங்களின் பெறுமதி மற்றும் தேவையைக் கணிப்பிட்ட பின்னர், அவர்களுக்குத் தேவையான புதிய உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அல்லது உரிய இழப்பீடுகளை வழங்குவதற்கும் ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் தத்தமது பகுதி கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக விபரங்களை வழங்க முடியும் எனவும் செயலகம் குறிப்பிட்டுள்ளது. (8)

### அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட

# அனைத்து விவசாயிகளுக்கும் இழப்பீடு வழங்கப்படும்

### பிரதி விவசாய அமைச்சர்

**(கொழும்பு)........................ அண்மையில் நாட்டைத் தாக்கிய டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவில் நட்டஈடு வழங்கப்படும் என பிரதி விவசாய அமைச்சர் நாமல் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மைய அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் இழப்பீட்டு தொகைகளை வழங்கும் நடவடிக்கை முழுமையாக்கப்படும்.

கடந்த கால இயற்கை அனர்த்தங்களின் காரணமாக சேதமடைந்த விவசாய நிலங்களில் சுமார் அரைவாசிக்கும் மேற்பட்ட நிலங்களில் மீளவும் விவசாய நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்த பருவத்திலிருந்து சம்பா மற்றும் கீரி சம்பா நெல் வகைகளுக்கு அதிக விலையை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேலும், புதிய ஆண்டிலிருந்து விதை நெல் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு திட்டமொன்றை ஆரம்பிக்க விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (8)

## அரசாங்க அதிபர் - ஐ.ஓ.எம் பிரதிநிதிகள் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனுக்கும் ஐ.ஓ.எம் (சர்வதேச இடம் பெயர்வு அமைப்பு) பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் கடந்த 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தில் வெள்ள அனர்த்த பாதிப்பு மற்றும் அதிக பாதிப்புக்கு உள்ளான இடங்கள் அதன் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக அரசாங்க அதிபரிடம் கேட்டறிந்து கொண்டார்கள்.

இதன் போது, ஐ.ஓ.எம் பிரதிநிதிகள் அதிக பாதிப்புக்கு உள்ளான சாவகச்சேரி பிரதேசத்தினை நேரில் சென்று பார்வையிட உள்ளதாகவும் தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் ஐ.ஓ.எம் நிறுவனத்தின் பிரதிநிதிகள் ரிச்சர்ட் படிஷ்ரா (பிலிப்பைன்ஸ்) மற்றும் சுசில் (நேபாளம்) ஐ.ஓ.எம் நிறுவனத்தின் இலங்கை திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் செந்தில் மகேந்திரன், செல்வி.யுரேக்கா சோமவன்சா வினுறி மலாலகே மற்றும் டினு ஸ்ரீவர்த்தனா, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.சிவகரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (8)

## நெடுந்தீவு கடற்பரப்பில் 3 இந்திய மீனவர்கள் கைது!

(கொழும்பு)

நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று தமிழக கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கடலில் சுற்றுக்காவலில் ஈடுபட்டிருந்த வேளை நெடுந்தீவு கடற்பரப்பினுள் படகொன்றில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மூன்று தமிழக கடற்றொழிலாளர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் அவர்களின் படகினையும் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்திற்கு கொண்டு வந்து, படகினை அப்பகுதியில் தடுத்து வைத்தது டன்.மூன்று கடற்றொழிலாளர்களையும் கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (8-33)

## வெளிநாட்டு துப்பாக்கியுடன் கைது

(கொழும்பு)

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, மகசின் மற்றும் 25 ரி-56 ரக தோட்டாக்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினரால், இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மினுவாங்கொடை - ஹீனட்டியன பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (8)

## இந்தியர்கள் அதிகம் விரும்பும் நாடுகள் வரிசையில் இலங்கை

(கொழும்பு)

இந்தியப் பயணிகள் பண்டிகைக் காலங்களில் அதிகம் விரும்பும் சர்வதேச சுற்றுலாத் தலங்கள் குறித்த ஆய்வறிக்கையை MakeMyTrip இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

இதில் இலங்கை ஒரு முக்கியமான மைல்கல்லை எட்டியுள்ளது.

இந்த ஆய்வின்படி, இந்தியர்கள் அதிகம் முன்பதிவு செய்த நாடுகள் வரிசையில் இலங்கை மூன்றாமிடத்தில் உள்ளது.

அத்துடன் குறித்த வரிசையில் தாய்லாந்து முதலிடத்தில் உள்ளதுடன், ஐக்கிய அரபு இராச்சியம் இரண்டாமிடத்தில் உள்ளது. இலங்கையைத் தொடர்ந்து வியட்நாம் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.

இலங்கைக்கு வருகை தரும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், சுற்றுலாத் தலங்களில் பாதுகாப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய முக்கிய சுற்றுலா மையங்களில் மேலதிக பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்தியர்களுக்கான விசா நடைமுறைகள் எளிதாக்கப்பட்டதும், குறைந்த செலவில் விமானப் பயணங்கள் அமைவதும் இலங்கை இந்த இடத்தைப் பிடிக்க முக்கிய காரணங்களாகக் கருதப்படுகின்றன. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கைக்கெதிரான ரி-20 தொடர் பாகிஸ்தான் குழாம் அறிவிப்பு



இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடவுள்ளது.

இதற்கமைய குறித்த தொடருக்கான 15 பேர் கொண்ட பாகிஸ்தான் குழாம் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சல்மான் அலி ஆகா தலைமையிலான குறித்த குழாமில் அப்துல் சமத், அப்ரார் அஹமட், ஃபஹீம் அஷ்ரப், ஃபகார் சமான், க்வாஜா நபாய், மொஹமட் நவாஸ், மொஹமட் சல்மான் மிர்சா, மொஹமட் வசீம் ஜூனியர், நசீம் ஷா, சாஹிப்ஸதா ஃபர்ஹான், சைம் அயூப், ஷதாப் கான், உஸ்மான் கான் மற்றும் உஸ்மான் தாரிக் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் பிக் பேஷ் லீக் தொடரில் விளையாடுவதால், பாபர் அசாம், ஷஹீன் அப்ரிடி, ஹரிஸ் ரவூப் மற்றும் மொஹமட் ரிஸ்வான் ஆகிய முன்னணி வீரர்களுக்கு இந்தத் தொடரில் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த 3 ரி-20 போட்டிகளும் தம்புள்ளையில் நடைபெறவுள்ளன. இந்தநிலையில் இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது ரி- 20 போட்டி எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## கிரிக்கெட் மைதானத்தில் சோகம்

# போட்டி ஆரம்பமாவதற்கு முன் உயிரிழந்த பயிற்றுவிப்பாளர்

பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடரில் டாக்கா கப்பிடல்ஸ் அணியின் உதவிப் பயிற்றுவிப்பாளராகவும், பங்களாதேஷின் பந்து வீச்சு நிபுணராகவும் பணியாற்றிய மஹ்பூப் அலி ஜாகி, போட்டி தொடங்குவதற்கு சற்று நேரத்திற்கு முன்னதாக மாரடைப்பால் காலமானார்.


சில்ஹெட் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் டாக்கா கப்பிடல்ஸ் அணியின் தொடக்க ஆட்டம் ஆரம்பமாவதற்கு சில நிமிடங்களே இருந்த நிலையில், ஜாகி திடீரென மைதானத்திலேயே சுருண்டு விழுந்துள்ளார்.

இதனையடுத்து அவர் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பங்களாதேஷ் கிரிக்கெட் சபை விடுத்துள்ள அதிகாரபூர்வ அறிக்கையில், "மஹ்பூப் அலி ஜாகியின் மறைவு பங்களாதேஷ் கிரிக்கெட்டிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.


அவரது அர்ப்பணிப்பு மற்றும் வேகப்பந்து வீச்சுத் துறையில் அவர் ஆற்றிய பங்களிப்பு எப்போதும் நன்றியுடன் நினைவு கூரப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் விளையாட்டு மேம்பாட்டுத் துறையில் நீண்ட காலம் பணியாற்றியவர். பல வளர்ந்து வரும் இளம் வேகப்பந்து வீச்சாளர்களை சர்வ தேச தரத்திற்கு உயர்த்துவதில் இவர் முக்கிய பங்காற்றியுள்ளார்.

மைதானத்தில் ஏற்பட்ட இந்த திடீர் அனர்த்தத்தைத் தொடர்ந்து, சில்ஹெட் மைதானத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவல்துறை மற்றும் மருத்துவக் குழுவினர் துரிதமாகச் செயற்பட்ட போதிலும், ஒரு சிறந்த பயிற்சியாளரைக் கிரிக்கெட் உலகம் இழந்துள்ளது. (3)



# உலக யோகா கிண்ணப் போட்டியில் இலங்கை வீரர்கள் தங்க வேட்டை





இந்தியாவின் டில்லியில் உள்ள பண்டிட் தீன்தயாள் உபாத்யாய மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற யோகா அமைப்பின் 4 ஆவது உலக யோகா கிண்ணப் போட்டிகளில், இலங்கை அணி சர்வதேச ரீதியில் பெரும் சாதனையைப் படைத்துள்ளது.

இதுவரை வெளியாகியுள்ள முடிவுகளின்படி, இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திச் சென்ற அணியில் 5 வீரர்கள் வெவ்வேறு வயதுப்பிரிவுகளில் தங்கப் பதக்கங்களை வென்று சர்வதேச அரங்கில் இலங்கையின் நாமத்தைப் பொறித்துள்ளனர்.

இதற்கமைய தங்கப் பதக்கம் வென்ற சாதனையாளர்களாக, 6 - 7 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் எஸ்.கவின், 9 - 11 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவின் பி.தினுக்ஸன், 11 - 12 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் கே.மதுமிதா, 13 - 15 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் எல். சக்ஷயா மற்றும் 19 - 21 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் ஆர்.தனுஷியா ஆகியோரே சாதனை படைத்துள்ளனர். (3)

## அமெரிக்க அணியின் பயிற்றுவிப்பாளராக

# இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர்



அமெரிக்க அணியின் பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராக இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் தம்மிக்க பிரசாத் நியமிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் இருபதுக்கு இருபது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை இலக்காகக் கொண்டு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அந்தப் பொறுப்புக்கு மேலதிகமாக, அவருக்கு அணியின் உதவிப் பயிற்றுவிப்பாளர் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

2026 உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்க கிரிக்கெட் அணி ஜனவரி மாதம் 10 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளது.

இந்தநிலையில் அவர்கள் தமது உலகக் கிண்ணப் பயிற்சிகளை இலங்கையிலிருந்து ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

உலகக் கிண்ணத் தொடரின் ஆரம்பத்தில் அமெரிக்கா அணி தமது முதல் போட்டியில் இந்தியாவை எதிர்கொள்ளவுள்ளது.

இந்தப் போட்டியானது எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி வான்கடே மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்வரும் 01.01.2026 முதல்

# லஞ்சீற் பாவனைக்கு முற்றாக தடை மீறினால் சட்ட நடவடிக்கை

### பரு.துறை நகரசபை

(கரணவாய்) .............................

**உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களில் எதிர்வரும் 01.01.2026 முதல் லஞ்சீற் பாவனை முற்றாக தடைசெய்யப்படும் எனவும் அதனை மீறும் உணவகங்கள் உள்ளிட்ட வியாபார நிலையங்களின் வியாபார உரிமம் இடை நிறுத்தப்படும் எனவும் பருத்தித்துறை நகரசபை அறிவித்துள்ளது.**

பருத்தித்துறை நகரசபை தலைவர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் உணவகங்கள் மற்றும் உணவுப் பொருட்களை கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுடன் பருத்தித் துறை நகரசபை மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது பருத்தித்துறை நகரசபை பொதுச் சுகாதார பரிசோதகர் ப.தினேஷ் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், 2026 ஆம் ஆண்டு முதல் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களில் உள்ளக பயன்பாடு மற்றும் உணவு பொதியிடல் உள்ளிட்ட எந்த செயற்பாடுகளின் போதும் லஞ்சீற் பயன்படுத்த முடியாது எனவும் அவ்வாறு செயற்படுவர்கள் மீது நீதிமன்றத்தின் ஊடாக நேரடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதுடன், அதனை மீறி செயற்படும் வியாபார நிலையங்களின் வியாபார உரிமத்தை நகர சபை தலைவருக்கு உள்ள அதிகாரத்தின் கீழ் இடைநிறுத்தப்படும்.

லஞ்சீற் பாவனைக்கு மாற்றீடாக உள்ளக பயன்பாட்டில் வாழை இலை, தாமரை இலை, தேக்கம் இலை போன்றவற்றையும் உணவு பொதியிடலின் போது ஈய பேப்பர் மற்றும் உணவு பொதியிடலுக்காக அனுமதிக்கப்பட்ட கொள்கலன்களை பயன்படுத்த முடியும்.

அத்துடன் பருத்தித்துறை நகர சபை எல்லைக்குட்பட்ட உணவகங்களின் பயன்பாட்டிற்கு கொள்வனவு செய்யப்படும் இறைச்சி வகைகளை நகரசபைக்கு உட்பட்ட இறைச்சி கடைகளில் இருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். இதன்போது கலால் செய்யப்பட்ட இறைச்சிகளை நகர சபைக்கு வெளியே இருந்து தான் பெற்றுக்கொள்ள கூடியதாக இருப்பதாக சில உணவக தரப்பினரால் சுட்டிக் காட்டப்பட்ட போது, அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களினால் அங்கீகரிக்கப்பட்ட இறைச்சி விற்பனை நிலையங்கள் அல்லது இறைச்சி கூடங்களில் இருந்து கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் அதற்கான பற்றுச்சீட்டை அவசியம் வைத்திருக்க வேண்டும் எனவும் நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, கடந்த ஒக்டோபர் 1 ஆம் திகதி முதல் பருத்தித்துறை நகர சபைக்குட்ட உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களில் உள்ளக பயன்பாட்டில் லஞ்சீற் பாவனை தடை செய்யப்பட்டுள்ளதுடன் 01.01. 2026 முதல் முற்று முழுதான லஞ்சீற் பாவனையை தடைசெய்யும் வகையில் மூன்று மாத கால அவகாசம் பருத்தித்துறை நகர சபையினால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-60)

### மண்கும்பானில்

## பாதிக்கப்பட்டுள்ள குளங்களை புனரமைத்தால் நன்னீர் நிலைகளை பாதுகாக்கலாம்

### தீவக முன்னேற்றக் கழகத் தலைவர்

(அராலி)

புதிய நீர் தேக்கங்களை அமைக்க நடவடிக்கை எடுப்பதை விடுத்து, வேலணை - மண்கும்பானில் ஏற்கனவே இருக்கின்ற, சீரமைக்கப்படாத குளங்களை சீர் செய்து தீவகத்தின் நன்னீர் நிலைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீவக முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் பிரதேச சபையின் உறுப்பினருமான சுவாமிநாதன் பிரகலாதன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மண்கும்பானில் ஏற்கனவே பிரதேச சபைக்குரிய 5 குளங்கள் இருக்கின்றன. இவற்றில் இரு குளங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. ஏனையவையும் கடுமையான பாதிப்புக்களுடனேயே இருக்கின்றன.

இவற்றை சீரமைத்தால் மண்கும்பானின் மழை காலங்களில் ஏற்படும் பிரச்சினைக்கும் ஓரளவு தீர்வு காணமுடியும்.

அதுமட்டுமல்லாது இது விவசாய தேவைகளுக்கும் சாதகமாக அமையும்.

மண்கும்பானில் மழை நீரை அதிகளவில் சேகரித்தால் மேலும் நன்னீர் இருப்பை மேம்படுத்திக் கொள்ளலாம்.

அதே நேரம் சாட்டிப் பகுதியின் பாதுகாப்பு அவசியமானது.

அதற்கான முயற்சி எடுக்கப்படுமானால் அதையும் வரவேற்போம் என்றார். (8-104)

## திருவாசக அரண்மனையில் திருவாசக விழா

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி திருவாசக அரண்மனையில் திருவாசக விழா எதிர்வரும் 03.01.2026 சனிக் கிழமை மாலை 3 மணியளவில் இடம்பெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இதய வைத்திய நிபுணர் வை.மனோமோகன் சிவகௌரி தம்பதிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வில் திருவாசக அர்பணத்தை இசை ஆசிரியர் திருமதி.புஷ்பலட்சுமி உமா சங்கர், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் குகனேந்திரன் அனுசன், செல்வி.தர்மிதா ஆனந்தரட்ணம், வைத்திய கலாநிதி. சிவரதி கேதீஸ்வரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நிகழ்வில் உடுவில் நாட்டிய கலாகேந்திரா, திருமதி. துஸ்யந்தி சுகுணன் நெறியாள்கையில் திருவாசக நாட்டிய அர்ப்பணம் இடம் பெறவுள்ளது. (8)



இணுவில் இந்துக்கல்லூரியில் மூன்று மாதகால யோகக்கலைப் பயிற்சி வகுப்பு அண்மையில் நடைபெற்றது. பயிற்சி வகுப்பின் நிறைவில் வளவாளர்களுக்கு மதிப்பளிக்கும் வைபவமும் பயிலுநர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவமும் இணுவில் இந்துக் கல்லூரியில் கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

### சாவகச்சேரி நகரசபையின்

## 11 வட்டாரங்களுக்கும் 22 மில்லியன் ஒதுக்கீடு

### தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் 11 வட்டாரங்களுக்கும் தலா 2 மில்லியன் என்ற அடிப்படையில் 22மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையின் 2026ஆம் ஆண்டிற்கான பாதீட்டினை சபையின் அனுமதி கோரி சமர்ப்பித்து தலைமையுரை ஆற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபையின் 2026ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டம் 204 மில்லியன் 5இலட்சத்து 34 ஆயிரத்து 898ரூபாய் உத்தேச வருமானமாகவும், 204 மில்லியன் 5இலட்சத்து 28 ஆயிரத்து 673ரூபாய் உத்தேச செலவினை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் அரச நன்கொடை நிதி 63மில்லியனாகவும், சொந்த வருமானம் 141 மில்லியனாகவும் காணப்படுகின்றது.

மேலும் சுகாதாரப் பகுதி மேம்பாடு,வீதி விளக்கு,நவீன சந்தை அபிவிருத்தி,நூலக அபிவிருத்தி,பொன் விழா மண்டபத் திருத்தம் ஆகிய வற்றுக்கும் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (8-30)



சுன்னாகம் பாரம்பரிய ரோட்ரிக் கழகமும்-மன்னார் ரோட்ரிக் கழகமும் இணைந்து கடந்த 24 ஆம் திகதி புதன்கிழமை நல்லூர் சென் பெனடிக்ற் பாடசாலையில் தேவைப்பாடுடைய மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்கி வைத்திருந்தன. (படம்-சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களிடம்

# கல்விக்கு அப்பால் கலையும் இருக்க வேண்டும்

## ஆளுநர் நா.வேதநாயகன்

(யாழ்ப்பாணம்)

**இன்றைய மாணவர்கள் ஓய்வில்லாமல் ஓடிக் கொண்டிருக்கின்றனர். கல்வியில் மாத்திரமே கவனம் செலுத்துமாறு பெற்றோர்கள் அவர்களை நிர்ப்பந்திக்கின்றனர். ஆனால், கல்விக்கு அப்பால் கலையும் விளையாட்டும் மாணவர்களுக்கு இன்றியமையாதது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**



வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டுக்கழகங்கள் மற்றும் கலை மன்றங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், ஆற்றுகைப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

இளைய சமூகத்தினர் தமது ஓய்வு நேரங்களை கலை மற்றும் விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதை நாம் ஊக்குவிக்க வேண்டும். மாணவர்களுக்குப் போதிய ஓய்வு நேரங்களை உருவாக்கிக் கொடுத்து, அவர்களை இத்துறைகளில் ஈடுபடுத்த வேண்டும். அப்போதுதான் சமூகத்தில் அச்சுறுத்தலாக விளங்கும் போதைப் பொருள் பாவனை மற்றும் கலாசார சீரழிவுகளில் இருந்து எமது இளைய சமூகத்தைப் பாதுகாக்க முடியும். மேலும் வடக்கு மாகாணம் கல்வி, விளையாட்டு மற்றும் கலை ஆகிய துறைகளில் மீண்டும் உன்னத நிலையை அடைய வேண்டும் என தெரிவித்தார். (8)



ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்.பிராந்திய கிளைகளின் அனுசரணையுடன் சாவகச்சேரி கிளை முன்றலில் வர்த்தகக் கண்காட்சி கடந்த 23 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் "சஞ்சீவி" மாதர் பாரம்பரிய உள்ளூர் உற்பத்தி நிறுவனமும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சி கல்வி வலய தமிழ்பிரிவின் தமிழ்த்தின விழாவும் சான்றிதழ் வழங்கலும்


(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கல்வி வலயத் தமிழ்ப்பிரிவு முன்னெடுக்கும் தமிழ்த்தின விழாவும்- சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30மணிக்கு சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சிக் கல்வி வலய வலயக்கல்விப் பணிப்பாளர் கிறிஸ்தோபர் கமலராஜன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற் துறைப் பேராசிரியர் நா.பிரதீபராஜாவும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் கு.ஜோதிரட்ணராஜாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (8-30)

## 'அலையோடு உறவாடு'

# காங்கேசன்துறை கடற்கரையில் உணவுத் திருவிழா



(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுற்றுலாப் பணியகம் மற்றும் வலி. வடக்கு பிரதேச சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் "அலையோடு உறவாடு ... " என்ற தொனிப்பொருளில், உணவுத் திருவிழா காங்கேசன்துறைக் கடற்கரையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பாரம்பரிய உணவுகள் மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை, பண்பாட்டு நிகழ்வுகள், சிறுவர்களுக்கான மகிழ்வூட்டும் விளையாட்டுக்கள் மற்றும் இன்னிசை இசைக்கச்சேரி என்பன இடம்பெற்றன. (8-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 850 | 900 | 900 | 800 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 250 |
| பச்சைமிளகாய் | 1500 | 1300 | 800 | 1500 |
| தக்காளி | 600 | 650 | 600 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 200 | 150 |
| கோவா | 350 | 300 | 400 | 400 |
| கரட் | 400 | 350 | 400 | 400 |
| பூசணி | 120 | 140 | 150 | 150 |
| புடோல் | 400 | 400 | 400 | 600 |
| வாழைக்காய் | 100 | 120 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250-300 | 300 | 500 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 200 | 250 |
| பாகற்காய் | 1400 | 1200 | 1500 | 2000 |
| வெண்டக்காய் | 350 | 300 | 400 | 600 |
| கருணைக் கிழங்கு | 350 | 280 | 300 | 400 |
| பயற்றங்காய் | 700 | 600 | 1000 | 600 |
| லீக்ஸ் | 350 | 350 | 400 | 400 |
| பீற்றூட் | 350 | 600 | 600 | 800 |
| கறிமிளகாய் | 1400 | 1300 | 1000 | 1500 |
| முருங்கைக்காய் | 1800 | -- | 2000 | -- |
| போஞ்சி | 800 | 650 | 1000 | 900 |
| கத்தரிதம்புள்ள | 800 | 700 | 600 | 700 |
| கீரை – 1 பிடி | 180 | 160-200 | 200 | 200 |
| தேசிக்காய் | 800 | 600 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 200 | 150 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 700 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 600 | 1000 | 600 | 800 |
| முள்ளங்கி | 300 | 250 | 400 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 200 | 80 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 100 |
| [illegible] | 100 | 150 | 150 | 150 |


## செல்லப்பா சுவாமி குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசைநிகழ்வு இன்று திங்கட்கிழமை, நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு திருமுறை நற்சிந்தனைப் பாடல்களைத் தொடர்ந்து, காலை 10 மணிக்கு "ராஜவசியம்" எனும் தலைப்பில், யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர் குமரேசன் பாலஷண்முகன் உரையாற்றவுள்ளார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சி- வரணி குடும்ப முன்பள்ளிகளின் மாணவர் கௌரவிப்பும் கலை நிகழ்வும் அண்மையில் வரணிக்குடும்ப முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி லோகிதன் கேதிகா தலைமையில் வரணியில் அமைந்துள்ள தென்மராட்சி கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. (படம்:சுபேசன்)



யாழ்ப்பாணம் - கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் வித்தியா கணபதி மீது பாடப்பட்ட "வித்தியா கணபதி பாமாலை" இறுவட்டு கடந்த 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது. (படம்:சுபேசன்)

## மக்களுக்கு வழங்கப்படவிருந்த உணவுப்பொதிகள் திருட்டு

(கொழும்பு)

டித்வா சூறாவளியால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட விருந்த உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய 55 பொதிகள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் - கற்பிட்டி மண்டல குடா பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அனர்த்தங்களினால் குறித்த பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக விநியோகிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சிய உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய 181 பொதிகள் அந்த பகுதியிலுள்ள வீடொன்றில் வைக்கப்பட்டது.

இந்நிலையில் சுமார் 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 55 உலர் உணவுப் பொதிகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

## மிளகு விலை சடுதியாக அதிகரிப்பு

(கொழும்பு)

மிளகின் விலை கடந்த வாரத்தை விட அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாரம் GR1 இரகத்தைச் சேர்ந்த ஒரு கிலோ ஏற்றுமதி மிளகு 2250 ரூபாவிற்கு பதிவாகியுள்ளதாக ஏற்றுமதி வேளாண்மைத்துறை தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் ஒரு கிலோ ஏற்றுமதி மிளகு 2150 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8)



நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலையின் இருபத்தைந்து ஆண்டு நிறைவு - வெள்ளிவிழா அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலய சூழலில் இடம்பெற்ற இவ்விழாவில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் மற்றும் நல்லூர் சிவகுரு ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ வேலன் சுவாமிகள் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர். (படம்:சிவசாந்தன்)



# இலங்கைச் சைவரெல்லாம் விழாக்காண வரும் திண்ணபுரம் கூத்தன்

**மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேர் என்னக்**
**கையால் குடைந்து குடைந்து உன் கழல்பாடி**
**ஐயா வழியடியோம் வாழ்ந்தோம் காண்**
**ஆரழல் போல் செய்யா! வெண்ணீறு ஆடி! செல்வா!**
**சிறு மருங்குல் மையார் தடங்கண் மடந்தை மணவாளா!**
**ஐயா! நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்**
**உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்**
**எய்யாமல் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.**

திருவெம்பாவை

நிறைந்த நெருப்புப் போன்ற செம்மை நிறம் வாய்ந்த சிவனே! திருநீற்றுப் பொடியில் மூழ்கியவனே! ஈசனே! உமையம்மையின் கணவனே! எம்பெருமானே! நீரை இறைத்து மூழ்கி உன் **திருவடியைப் புகழ்ந்து பாடி உனது பரம்பரை அடிமைகளாக வாழ்ந்த நாங்கள்.** தலைவனே! திண்ணபுரம் தில்லைக்கூத்தனே ஈழத்துக் கூத்தனே! நீ ஆட்கொண்டருளும் திருவிளையாட்டினால் துன்பம் நீங்கிய இன்பம். யாங்களும் படிப்படியாக உய்தி பெற்று இனிய பிறவியில் மனம் சளைக்காதபடி **திருவாசகம் ஓதியும், சைவநெறியிலும், அறநெறியிலும் நாங்கள் இனிப் பிறவியில் இளைக்காதபடி எம்பெருமானே காத்தருள்வாயாக!**

மார்கழித் திங்கள் அறிவு நிறைந்த நல்வழி கிடைக்கின்ற பொன் நாட்களாகும். சிவபெருமானைத் திண்ணபுரத்தானை வைகறைப் பொழுதில் நீராடி ஆதவனை வணங்கி திருப்பள்ளி எழுச்சி பாராயணம் செய்து திருவெம்பாவை ஓதுவோம்.

ஆலய விழாவில் சுவாமி எழுந்தருளி வருவது ஓர் அருள்மிகு புண்ணிய பயனைத் தருகின்ற மார்கழித் திருவாதிரை தில்லைக்கூத்தருக்கு தேவர்களுக்கு புலரிக்காலமாயிருத்தலால் மார்கழி முழுவதும் வழிபாட்டுக்குச் சிறந்த காலமாகும். மார்கழிமாதம் தேவர்கள் வழிபடுவதுடன், இவ்வுலகத்தார் புலரிப்பொழுதில் திருவெம்பாவைத் திருவாசகத்தில் சிவன் அருளால் திருவண்ணாமலையில் அருளிய **"சக்தியை வியந்து"** முதலாவது வரியில் **"ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதி இறைவன்"** இயற்கையைத் தோற்றுவித்த கடவுள்.

இருகண்களினாலே தரிசித்தவர்களுக்குப் பேரின்பப் பேரருளும் தரும் சிதம்பரம் தில்லையாகிய விழாவை, ஈழத்தில் அடியார்கள் இங்கு சிவதலத்தை **ஈழத்துச் சிதம்பரம் என்று அன்பு பெருக அழைத்து நம் முன்னோர் வழிபட்டு கூத்தப்பெருமானது திருவடிகளைத் துதிப்பார்கள்.**

சிவ முருகர் திருவாசகம் எழுதியும், ஓதியும், திருவருளை நடத்துவிக்கும் என **திருப்பணியை ஊர்மக்களை** அழைத்து ஈடுபடச் செய்து, அவரது கனவில் தோன்றிய ஈசன், சொல்லியருளியவாறே, இந்தியா சிதம்பரம் அண்மையில் சிற்பனிடம் ஏழாவது சிவலிங்கத்திலிருந்து காற்று வீசவும் சிவ முருகரை ஆட்கொள்ளப்பட்ட இறைவன் அடியாரது துயர் தீர்க்கும் எம்பெருமான் சிற்பனிடம் கனவில் காட்சி கொடுத்து பத்து வராகனுக்குப் பெற்ற **சுந்தரேச அருள்மிகு சிவலிங்கப் பெருமானை குடமுழுக்குச் செய்து பேரருள் பெறுவோம்.**

சிவமுருகர் சிலகாலம் சிதம்பரம் கூத்தப்பிரானைப் பிரியாது தில்லையில் இருந்து அந்த நாட்களில் ஐந்து கரங்களையுடைய அருள்மிகு பிள்ளையார், கூரிய வேலையுடைய முருகப்பெருமான், சிவசக்தியாகிய உ[illegible] சௌந்திரிகா அம்பாளையும், வழிப்பாட்டை ஏற்றுக்கொள்ளும் சண்டேசுரப் பெருமானோடு சொல்லப்பட்ட நந்தி தேவர் பலிபீடம் விதிக்கப்பட்ட அளவின் படி செய்வித்து, தமது பொருளோடு அன்பர்கள் பலரும் உதவிய பொருளையும் சேர்த்து செய்து, அருள்மிகு திருவுருவங்களை ஏழினையும் பெற்றுக்கொண்டு சிவமுருகர் தில்லைக்கூத்தனது திருவடிகளை பல துதி பாடியும், திருவாசகம் ஓதியும் வணங்கி, எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போன வழியையே வரும் வழியாகவும், **காரைநகர் சைவநெறியிலே சிறந்து விளங்கவும் எல்லோரது வறுமை பிணி முதலிய துன்பங்களிலிருந்து நீங்கவும்** ஊர்காவற்றுறை வழியாக திண்ணபுரம் வந்து இறை அருளுடன் சேர்ந்தார்.

சௌந்தராம்பிகையாரை சுந்ரேசருடன் ஆதி மூலத்திலே பிரதிட்சை செய்து ஏனைய வடிவங்களாகிய அத்திருவுருவங்களுக்குத் தனித்தனி கோயில்களைக் கட்டி, கும்பாபிஷேகம் ஆகம நெறி தவறாது நடத்தி அக்காலத்தில் பேர்பெற்று விளங்கிய நான்கு சிவாச்சாரியர்களது நெறிப்படுத்தலில் குடமுழுக்குக் கும்பாபிஷேகம் நிறைவேற்றி, திருவிழாக்கள் விசேட அபிஷேகங்கள் விசேட பூசைகள் நிறைவாக காரைநகர் மக்களும் இலங்கை மக்களும் இறைவன் திருவடிகளை வழிபட்டு சகல திருவருளும் பெற்று உய்தனர்.

**சித்தர் சிவவாக்கியம் அறிவு நிலை பாடல் 486**

எங்கள் குலதெய்வமே அற்பநேரமும் ஒழிந்திருக்க ஆகுமோ! எமது முன்னோர் நம் வழிபட்டு ஏகனே இறைவனே எனப்போற்றும் எம் ஈழத்துக் கூத்தன்! எம்பெருமானே! உனது நாட்டம் எனது நாவில் உதவி செய்வீர்! ஈசனே! ஐயனாரே! எனும் ஓர் சித்தர்பாடல்,

**என்னை அற்ப நேரமும் மறக்கிலாத நாதனே**
**ஏகனே இறைவனே இராசராச ராசனே**
**உன்னை அற்ப நேரமும் ஒழிந்திருக்க லாகுமோ**
**உனது நாட்டம் எனதுநாவில் உதவி செய்வீர் ஈசனே**

(சித்தர்வாக்கு)

**ஒரு வாசகமும் அறியா என்னை**
**திருவாசகம் எனும் தேனுள் அமிழ்த்தி**
**குருவாசகத்தில் உயர்ந்திடச் செய்யும்**
**மணிவாசகரின் மலரடி போற்றி**

மெய்யன்பர்களே இறைவனை சேவிக்க எமக்கு வாய்த்த அற்புதப் பிறவி இவ் மனிதப்பிறவி. அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்பார் ஔவைப்பிராட்டி. எனவே அற்ப சிற்றின்பங்களின் பால் சிந்தையை சிதறவிடாது நமை தடுத்தாற் கொள்ள வல்ல அரும்பதிப்பான இவ் பதிப்பை பிரதியெடுத்து பத்திரப்படுத்தி உங்கள் பிள்ளைகளையும் ஏனைய சைவ சிறார்களையும் பொருள் உணர்ந்து வாசிக்க வழிசமைத்து **திண்ணபுரத்தே திருநடனம் புரியும் சௌந்திராம்பிகா சமேத சுந்தரேசரின் திருவருள் கடாட்சத்துக்கு பாத்திரமாவோமாக.**

**சர்வமும் சிவார்ப்பணம்.**

க.கு.க.சிவபாலன்
சிறநெறிப்புலவர், பாஞ்சசண்யம்



(C-4687)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மியன்மாரில் குண்டுவெடிப்புகளுக்கு மத்தியில் நடத்தப்படும் தேர்தல்

### ஐ.நா.சபை கடும் அதிருப்தி

(நெய்பிடோ)

மியன்மாரில் நேற்று ஆரம்பமான தேர்தல் ஒரு ஏமாற்று நிகழ்வென தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், முக்கிய அரசியல் கட்சிகள் கலைக்கப்பட்டுள்ளதுடன், பல தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், நாட்டில் நிலவும் உள்நாட்டுப் போர் காரணமாக பெரும்பாலான மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இராணுவ ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டு 5 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெறும் தேர்தல் பல கட்டங்களாக நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வாக்களிப்பைத் தடுப்பவர்கள் அல்லது எதிர்ப்பவர்களுக்கு மரண தண்டனை உட்பட கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் என இராணுவம் தெரிவித்துள்ளது.

புதிய இராணுவ சட்டத்தின் கீழ் 200 இற்கும் அதிகமானவர்கள் மீது ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டுள்ளது. நேற்று வாக்குப்பதிவு ஆரம்ப மான நிலையில், நாட்டில் குறைந்தது இரண்டு பகுதிகளில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



எறிகணை தாக்குதலில் மூவர் காயமடைந்துள்ளதாகவும் அவர்களில் ஒருவரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தவிர, தாய்லாந்து எல்லையை ஒட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் 10 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இந்த சம்பவத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளதாகவும் உள்ளூர் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, மியன்மார் இராணுவ ஆட்சிக் குழுவின் தலைவர் மின் ஆங் ஹ்லேங் தேர்தல் வாக்குப்பதிவு சுதந்திரமாகவும் நீதியாகவும் நடைபெறுவதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டை மீண்டும் பல கட்சி ஜனநாயக ஆட்சி முறைமைக்குக் கொண்டு வருவதே தமது நோக்கம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த தேர்தலில் வாக்களிக்க மறுப்பவர்கள் ஜனநாயகத்தை நோக்கிய முன்னேற்றத்தை நிராகரிப்பவர்களாக கருதப்படுவார்கள் என அவர் எச்சரித்துள்ளார்.

இராணுவ ஆட்சியினையும் தனது அதிகாரத்தையும் நிலைநிறுத்தி அங்கீகாரத்தை பெறும் நோக்கில் சீனாவின் ஆதரவுடன் இராணுவ ஆட்சிக்குழு இந்த தேர்தலை நடத்துவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இந்த நிலையில், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் மியன்மாரின் தற்போதைய களநிலைமை குறித்து அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடல் அல்லது அமைதியான முறையில் கூடுவதற்கான மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (3)





## ஜப்பானில் கோர விபத்து; 20 வாகனங்கள் எரிந்து நாசம்

(டோக்கியோ)

ஜப்பானில் பனி படர்ந்த சாலையில் சென்ற 60 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளானது. இதனால், ஏற்பட்ட தீ விபத்தில் 20 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் எரிந்து நாசமாகியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இது குறித்து பொலிஸார் கூறியதாவது, டோக்கியோவில் இருந்து சுமார் 160 கிலோ மீற்றர் தொலைவில் குன்மா மாகாணத்தில் உள்ள கான் எட்சு நெடுஞ்சாலையில்தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

புத்தாண்டு விடுமுறையைக் கொண்டாடுவதற்காக பொதுமக்கள் கார்களில் அணிவகுந்து சென்றுள்ளனர். நேற்று முன்தினம் இரவு கடுமையான பனிப்பொழிவு காரணமாக சாலைகளில் பனி படர்ந்து காணப்பட்டுள்ளது.

இதனால், மினகாமி நகரில் இரு லொறிகள் மோதி விபத்துக்குள்ளாகின. அதன் பிறகு பனி காரணமாக ஒன்றன் பின் ஒன்றாக சுமார் 60 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் மோதியுள்ளன. இதில் 20 வாகனங்கள் தீயில் எரிந்து நாசமாகின. 7 மணிநேரம் போராட்டத்திற்கு பிறகு தீயணைக்கப்பட்டது. இந்த விபத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளனர். 25 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து காரணமாக கான்-எட்சு நெடுஞ்சாலையில் போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (3)

### அதிர வைத்த ஈரான்

## மேற்குலக நாடுகளுடன் முழு அளவிலான போர்!

(டெஹ்ரான்)

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் ஈரான் ஒரு முழு அளவிலான போரில் ஈடுபட்டுள்ளதாக ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நடைபெறவுள்ள நிலையில் இந்த கருத்து வெளியாகியுள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஐரோப்பா ஆகிய நாடுகள் ஈரானின் நிலைத்தன்மையை சீர்குலைக்க விரும்புவதாகவும், அவற்றுடன் ஈரான் போரில் ஈடுபட்டுள்ளதாகவும் ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியன் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் இணையதளத்தில் வெளியான நேர்காணலில், தற்போதைய சூழலானது 1980களில் ஈராக் உடன் நடைபெற்ற போரை விட மோசமானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் 1980-1988 ஆம் காலப்பகுதியில் நடைபெற்ற போரை விட, தற்போதைய மேற்குலக நாடுகளுடனான மோதல் “மிகவும் சிக்கலானது மற்றும் கடினமானது” என்று அவர் விவரித்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா நடத்திய 12 நாள் வான்வழித் தாக்குதலில் மூத்த இராணுவத் தளபதிகள் மற்றும் அணுசக்தி விஞ்ஞானிகள் உட்பட சுமார் 1,100 ஈரானியர்கள் கொல்லப்பட்டனர்.

இதற்குப் பதிலடியாக ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் இஸ்ரேலில் 28 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## சோமாலிலா... அங்கீகரித்...

### சோமாலிய...

(ஹர்கீசா)

சோமாலியாவில் இருந்து பிரிந்து சுயாட்சி அதிகாரம் கோரி வரும் சோமாலிலாந்துப் பகுதியை, ஒரு சுதந்திர நாடாக இஸ்ரேல் அதிகாரபூர்வமாக அங்கீகரித்துள்ளது.

இதனூடாக, இத்தகைய அங்கீகாரத்தை வழங்கும் உலகின் முதல் நாடாக இஸ்ரேல் அமைந்துள்ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் சோமாலிலாந்து தலைவர் அப்திரஹ்மான் மொஹட் அப்துல்லாஹி ஆகியோருக்கு இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியானது.

இரு நாடுகளும் முழுமையான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தவும், பரஸ்பரமாக தூதரகங்களைத் திறக்கவும் ஒப்புக்

கொள...

இ... யம், ... நுட்ப... ளாத... உட... வழா... வந்த...

இ... லின்... சோம... எதிர்... ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# தாய்லாந்து-கம்போடியா இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்து!

**(பாங்கொக்)**

**தாய்லாந்து-கம்போடியா நாடுகளுக் கிடையே நீடித்து வரும் எல்லை மோதல் களை முடிவுக்கு கொண்டு வருவதற்கான இரு நாடுகளுக்கம் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளது.**



தாய்லாந்து- கம்போடியா இடையே எல்லையில் உள்ள நகரை சொந்தம் கொண்டாடுவது தொடர்பாக நீண்ட காலமாக பிரச்சினை இருந்து வருகி றது. இது தொடர்பாக மோசமான போர்ப்பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு, இரு இராணுவத்தினருக்கும் இடை யில் மோதல் வெடித்தது.

கடந்த ஜூலை மாதம் இரு நாட்டு இராணுவத்தினரும் மோதிக் கொண்டனர். ஐந்து நாட்கள் சண்டைக்குப் பிறகு போர் நிறுத்தம் ஏற்பட்டது.

அதன்பின் எல்லையில் பதற்றம் சற்றுத் தணிந்தது. பின்னர் கடந்த சில நாட்களுக்கு முன்னதாக மீண்டும் சண்டை தொடங்கி யது. இந்த நிலையில் இரு நாடுகளும் புதிய போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெ ழுத்திட்டுள்ளன. இதன் மூலம் எல்லையில் நடைபெற்ற ஒருவார சண்டை முடிவுக்கு வருகிறது.

கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற சண்டையின்போது 18 கம்போடிய இராணுவ வீரர்களைத் தாய்லாந்து கைது செய்தது.

அவர்களை 72 மணி நேர போர் நிறுத்தத்திற்குப் பிறகு திரும்ப ஒப்படைக்க வேண்டும் என தாய்லாந்து நிபந்தனை விதித்துள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் அழுத்தத்தின்படி மலேசியா மதியஸ்தராக செயற்பட்டு ஜூலை மாதம் போர் நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்தது.

கம்போடியாவில் உள்ள விஷ்ணு சிலையைத் தாய்லாந்து இடித்துத் தள்ளியது. இதற்கு இந்தியா கடுமை யான கண்டனம் தெரிவித் தது. பின்னர் பாதுகாப்பிற்காகவே சிலையை உடைத்தோம் எனத் தாய்லாந்து சமாளித்தது குறிப்பிடத் தக்கது. (3)

# ாந்தை தனி நாடாக த்தது இஸ்ரேல்!

## யா கடும் எதிர்ப்பு

கொண்டுள்ளன.

இதனிடையே, விவசா யம், சுகாதாரம், தொழில் நுட்பம் மற்றும் பொரு ளாதாரத் துறைகளில் உடனடி ஒத்துழைப்பை வழங்க இஸ்ரேல் முன் வந்துள்ளது.

இதேவேளை, இஸ்ரே லின் இந்த நடவடிக்கைக்கு சோமாலியா அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள் ளது.

இது தனது நாட்டின் இறையாண்மை மீதான நேரடித் தாக்குதல் என்றும், சர்வதேச சட்டங்களுக்கு எதிரானது என்றும் அந்த நாட்டுப் பிரதமர் ஹம்சா அப்தி பாரே கூறியுள்ளார்.

அத்துடன் சோமாலி லாந்து என்பது சோமாலி யாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும், இஸ்ரே லின் இந்த ஒருதலைப்பட்ச மான முடிவு ஆபத்தான முன்னுதாரணமாக அமை யும் என்றும் ஆபிரிக்க ஒன்றியம் தெரிவித்துள் ளது.

1991 ஆம் ஆண்டு சோமாலியாவில் ஏற்பட்ட உள்நாட்டுப் போருக்குப் பின்னர், சோமாலிலாந்து தன்னைத் தனி நாடாக அறிவித்துக் கொண்டது. கடந்த 30 ஆண்டுகளு க்கும் மேலாக சொந்த மாக நாணயம், கடவுச் சீட்டு மற்றும் காவல்துறை ஆகியவற்றைக் கொண்டுள் ளது.

அத்துடன், ஓரளவுக்கு நிலையான ஜனநாயக ஆட்சியை நடத்தி வருகிறது. ஏடன் வளைகுடாவில் மிக முக்கியமான புவிசார் அர சியல் இடத்தைப் பெற்றுள் ளது.

சர்வதேச அளவில் எந்தவொரு ஐக்கிய நாடுகள் உறுப்பு நாடும் இதுவரை சோமாலிலாந்தை அங்கீக ரிக்கவில்லை.

இஸ்ரேலின் இந்த முடிவு, மற்றைய நாடுகளும் சோமாலிலாந்தை அங் கீகரிக்க ஒரு தொடக்கப் புள்ளியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகி றது. (3)



# பேருந்து கவிழ்ந்து விபத்து

## ★15 பேர் உயிரிழப்பு ★பலருக்கு படுகாயம்



(வோஷிங்டன்)

மத்திய அமெரிக்காவின் மேற்கு குவாத்தமாலாவில் உள்ள சோலோலா பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை நிகழ்ந்த கோரமான வீதி விபத்தில் சிக்கி குறைந்தது 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

பயணிகள் பேருந்து ஒன்று கட்டுப்பாட்டை இழந்து ஆழமான பள்ளத்தாக்கில் விழுந்ததில் இந்தச் சம்பவம் நேர்ந்துள்ளது.

குவாத்தமாலாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள நெடுஞ்சா லையில் இந்தப் பேருந்து பயணி களை ஏற்றிக்கொண்டு சென்று கொண்டிருந்தது.

விபத்து நடந்த பகுதியில் மிக அடர்த்தியான பனிமூட்டம் நிலவி யதாகவும், இதனால் ஓட்டுநருக்கு வீதி சரியாகத் தெரியாததால் இந்த விபத்து நேர்ந்திருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

விபத்து குறித்துத் தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர், பள்ளத்தாக்கில் விழுந்து சிதைந்த பேருந்தில் இருந்து பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் 11 ஆண்கள், 3 பெண்கள் மற்றும் ஒரு குழந்தை உட்பட மொத்தம் 15 பேர் சம்பவ இட த்திலேயே உயிரிழந்துள்ளனர்.

படுகாயமடைந்த சுமார் 19 பயணிகள் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள் ளதாக மருத்துவமனை தகவல் களை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டு ள்ளன. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் வடமராட்சி உடுப்பிட்டி தெற்கு இளந்தளிர் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வும் கௌரவிப்பு விழாவும் கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உடுப்பிட்டி கலாசார மண்டபத்தில் உடுப்பிட்டி நலன்புரிச் சங்கத் தலைவர் சிதம்பரப்பிள்ளை சிவரஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

படம்-மகாலிங்கம்



இலங்கை முதல் உதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் ஸ்தாபகரும்-பிரதம ஆணையாளருமாகிய அமரர் தம்பு நாகேந்திரம் போஜனின் 14 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு அண்மையில் கொடிகாமத்தில் உள்ள தலைமைச் செயலகத்தில் தேசிய ஆணையாளர் கலாநிதி வை.மோகனதாஸ் தலைமையில் இடம்பெற்றது.

(படம்- சுபேசன்)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1993- இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 1இல் செவ்
கி-பா-27 1/2
உயரம் : 5'8"
தகைமை/தொழில்: O/L,Driver(own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16371

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
உயரம் :5'7"
தகைமை/தொழில்-CIMA,Supervisor(Canada)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16372

பிறப்பு:1990-இந்து
நட்சத்திரம்:திருவாதிரை 8இல் செவ்
உயரம் :5'6"
தகைமை/தொழில்: BSC,Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/16374

பிறப்பு: 1984- இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2இல் செவ்
உயரம்:5'11"
தகைமை/தொழில்-Dip inIT,LLB,Legal Cleark
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16375

பிறப்பு: 1995- இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
கி-பா- 46 7இல் செவ்
உயரம்:5'10"
தகைமை/தொழில்: Diploma,Avation Officer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்,விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/16376

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்:அத்தம்
உயரம் :5'4"
தகைமை/தொழில்: O/L, beautician
எதிர்பார்ப்பு:விவாகரத்தானவர்,வெளி நாடு
தொ.இ: G/14635

பிறப்பு -1991 - இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 11
உயரம் : 5'3"
தகைமை/தொழில் - BSc,Softwrae Engineer
எதிர்பார்ப்பு -தகுதியான ஆண்
தொ.இ: G/16120

பிறப்பு-1986-இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 66 7இல் செவ்
உயரம் : 5'4"
தகைமை/தொழில்: Bsc, Engineer
எதிர்பார்ப்பு: Engineer,Doctor
தொ.இ: G/14626

பிறப்பு-1988-இந்து
நட்சத்திரம்-புனர்பூசம்
கி-பா- 28
உயரம் : 5'2"
தகைமை/தொழில்: BCom,DO
எதிர்பார்ப்பு -அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15919

பிறப்பு-1998-இந்து
நட்சத் திரம்-அத்தம் 11 இல் சூரிசெவ்
உயரம் -5'4"
தகைமை/தொழில்:Bsc(IT),IT Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16127

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 508



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மூச்சுப் பயிற்சி

ஒருவர் "வாழ்கிறார்" என்று சொல்வதற்கும் "ஏதோ இருக்கிறார்" என்று சொல்வதற்கும் வித்தியாசம் இருக்குதல்லவா?

வாழ்கிறார் என்றால் தன்னுடைய உலகியல் கடமைகளையெல்லாம் ஒழுங்காக செய்கிறார் என்று அர்த்தம்.

"ஏதோ இருக்கிறார்" என்றால் "மூச்சு விட்டுக் கொண்டு இருக்கிறார்" என்று அர்த்தம் ஆனாலும் மூச்சு விடுவதைப் பொறுத்துத்தான் வாழ் நாள் நிர்ணயிக்கப்படுகிறது.

குறைவாக மூச்சு விடுபவர்கள் பல நாளைக்கு இருக்கிறார்கள். விரைவாக மூச்சு விடுகின்றவர்கள் விரைவாக போய் சேர்ந்துவிடுகிறார்கள்.

மனிதன் ஒரு நிமிடத்துக்கு 12 தடவை மூச்சு விடுகிறான். அவனுடைய சராசரி வாழ்நாள் - 100 வருடம்.

குதிரை ஒரு நிமிடத்துக்கு 16 தடவை மூச்சு விடுதாம். 25 வருடத்துக்கு மேலே இருக்கறது இல்லையாம்.

இதுவே இப்படி என்றால் ஒரு நிமிடத்துக்கு 34 தடவை மூச்சு விடுற புறாவோட நிலைமை எப்படியிருக்கும் என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

ஆமை ஒரு நிமிடத்துக்கு 4 தடவை மூச்சு விடுது. அதோட வாழ்நாள் 500 ஆண்டுகள். தேரை ஒரு நிமிடத்துக்கு 2 தடவை மூச்சு விடுது. அதோட வாழ்நாள் 2000 வருடம் என்கிறார்கள். நாம் எல்லாம் மூச்சுப் பயிற்சி செய்தால் நீண்டகாலம் நல்லபடியா வாழலாம்.

சித்தர்கள் எல்லாம் இந்த மூச்சுப் பயிற்சியைப் பற்றி நிறைய சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து மூச்சுப் பயிற்சி செய்து கொண்டு வந்தால் இரத்த அழுத்த நோய் வராதாம். ஆஸ்த்துமா (மூச்சிழுப்பிருமல் நோய்) வராது. ஞாபக சக்தி பெருகும். முகத்திலே களையுடன் ஒளியும் உண்டாகும்.

இரத்தம் சுத்தமாகும். நரை திரை உண்டாகாது. மூளையுடன் நுரையீரலும் வலுவடையும். கள் குடிக்கிறதினாலே உண்டாகக் கூடிய களிப்பை இந்த மூச்சுப் பயிற்சியே தரும் என்கிறார் திருமூலர்.

(மூச்சுப் பழக்கம் அல்லது வளியுள்ளடக்கும் முறை இன்னதெனல்)

**"புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டால்**
**கள்ளுண்ண வேண்டா தானே களி தரும்.**
**துள்ளி நடப்பிற்கும் சோம்பு தவிர்ப்பிக்கும்**
**உள்ளது சொன்னோம் உணர்வுடையோர்க்கே."**

திருமந்திரம்

பறவையை விட வேகமுடைய குதிரையாகிய உயிர்வளி... அதை மேற்கொள்ளுதல் என்றால் அதை அடக்கி நடத்துதல்...சரி.. இந்த மூச்சுப் பயிற்சியை நாம் எப்படி செய்யலாம்? மேல் நோக்கி அதாவது மல்லாந்து படுத்துக் கொள்ள வேண்டியது...மூச்சை மூக்கால் இழுத்து... கொஞ்ச நேரம் அடக்கி வைத்திருந்து பிறகு... முன்பு இழுத்தது மாதிரியே விட்டுவிட வேண்டும்.

இப்படி... படுத்துக்கொண்டு மூச்சுப்பை நிறையும்படியாக மூச்சு விட்டுப் பழகியபின், நின்று கொண்டோ, நடந்துகொண்டோ பழகலாம். கொஞ்ச நாளிலே... நாம எங்கேயிருந்தாலும்... பிரயாணம் செய்து கொண்டிருந்தாலும்... நம்மை அறியாமல் நீண்ட மூச்சு இழுத்து விடக் கூடிய பழக்கம் ஏற்பட்டுவிடும். இது மிகவும் சுலபமான ஒரு பயிற்சி... பழக்கத்துக்கு கொண்டு வந்து விட்டால் மிகவும் நல்லது.

காலையிலே எழுந்தவுடனே வாயைக் கொப்பளித்துவிட்டு, வெறும் வயிற்றிலே, மூன்று குவளை நிறையக் காய்ச்சிய ஆறின நீர்... குடிக்க வேண்டியது. அதன் பின்பு 20 நிமிடத்துக்கு குறையாமல் மூச்சப் பயிற்சி செய்யலாம் என்று அனுபவப் பட்டவர்கள் சொல்கிறார்கள்.

காலையிலே சந்தர்ப்பம் இல்லேன்னா சிற்றுண்டி சாப்பிட்டு இரண்டு மணி நேரம் கழிச்சு அல்லது சாப்பாடு சாப்பிட்டு மூணு மணி நேரம் கழிச்சு மூச்சுப் பயிற்சி பண்ணலாமாம். இப்ப.. இதுவரைக்கும் சொன்னது சாதாரணமான சுலபமான மூச்சுப் பயிற்சி. இதைத் தவிர பிரணாயாமம் போன்ற சில சிறப்பான பயிற்சிகள் எல்லாம் உண்டு. அதையும் கத்துக்கிட்டு செய்யலாம். மனசு வச்சு இதையெல்லாம் நாம ஆரம்பிச்சுட்டா... மருந்து செலவு இருக்காது. ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டிய அவசியம்லாம் வராதுஒரு ஆள் "அவசரமா ஆஸ்பத்திரிக்குப் போகணும்.. அதுக்கு என்ன வழி?" என்றான். "வேகமா நடந்துபோ... இந்தத் தெருவின் கடைசியிலேதான் ஆஸ் பத்திரி இருக்கிறது...!" என்றார்கள்.

"அதைவிட சீக்கிரமாக போக வேண்டும்!" என்றான்.

"அப்படி என்றால் சைக்கிளிலே போகலாம்!" என்றார்கள்.

"அதைவிட வேகமா போக வேண்டும் !" என்றான்.

"அப்படி என்றால் காரிலே போகலாம்!" என்றார்கள்.

"அதைவிட வேகமா போகணும்!" என்றான்.

"அப்படி என்றால் அதோ எதிரிலே நிக்குதே ஒரு வெறிநாய். அதை கல்லினால் அடி, துரத்த ஆரம்பிக்கும். சீக்கிரம் போய் சேர்ந்துவிடலாம்" என்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## சுண்டைக்காய்

சுண்டைக்காயை ஆங்கிலத்தில் Turkey berry என அழைப்பார்கள். நிழலை விரும்பும் மூலிகைகளுள் சுண்டக்காயும், மிளகுதக்காளியும் அடங்கும்.

சுண்டைக்காய் களைச் செடியாக வளரக்கூடியது. ஆனால் அதை கவனியாமல் நாம் கடந்து போய் கொண்டிருக்கிறோம். இரும்புச் சத்துக்கு சுண்டைக்காய் சிறந்த உணவாகும்.

அதாவது, குருதிச் சோகை உடையவர்கள், நீண்ட தூரம் நடக்கும் போது மூச்சு வாங்கினால், அதாவது இரத்தத்தில் இமோகுளோபினின் அளவு குறைவாக இருந்தால் சுண்டைக்காய் சிறந்த மூலிகையாகும்.

ஏனெனில் சுண்டைக்காயில் இரும்புச் சத்து அதிகமுள்ளது. ஆனால் சுண்டைக்காயை காயவைத்து வற்றலாக்கி பயன்படுத்தும் போது இவ் இரும்புச் சத்து அழிந்துவிடும். ஆகவே, சுண்டைக்காயை சிறிது எண்ணெயில் வதக்கி கறி சமைத்து சாப்பிடலாம்.

இதைச் சாப்பிட்ட பின்பு தோடம் பழச்சாறு அல்லது எலுமிச்சைம்பழ யூஸ் குடிக்கும் போது அதிலிருக்கும் உயிர்ச்சத்து C ஆனது சுண்டக்காயிலிருக்கும் இரும்புச் சத்தை இலகுவாக அகத்துறிஞ்சவைக்கிறது. இரண்டாவதாக இதயத்திற்கு இது சிறந்தது. ஏனெனில், இதிலுள்ள இரண்டு ஆன்டிஒக்சிடன் சத்துக்களான Gallic acid மற்றும் Ferulic acid எனும் இரண்டு சத்துக்களும் குருதி அமுக்கத்தை அதிகரிக்க விடாமல் தடுக்கிறது. இதனால் குருதி அமுக்கத்தை சீராக பேண உதவுகிறது. எலிகளில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளும் இரத்த அழுத்தத்தை குறைக்க உதவுவதாக உறுதிப்படுத்துகிறது.

அம்மை நோய் மற்றும் வைரஸ், பக்ரீரியாவிற்கு எதிராக தொழிற்படும் ஆற்றலும், நோய் எதிர்ப்பு சக்தியை கொடுக்கக்கூடிய நுண் ஊட்டச் சத்துக்களும் இவ் Night shade சுண்டைக்காய்களுக்கு உண்டு. வாய்ப்புண்ணை ஆற்றும் தன்மையும்



சுண்டைக்காயை சாப்பிடுவதால் கிடைக்கக்கூடியதாக இருக்கும். காலம் காலமாக எம் முன்னோர்கள் சுண்டக்காயை பயன்படுத்தி வந்துள்ளார்கள்.

ஆனால் வற்றலாக அல்லாமல் உடன் சுண்டைக்காய்களாக பயன்படுத்தும் போது நிறைய ஊட்டச் சத்துக்கள் எமது உடம்பிற்கு கிடைக்கக்கூடியதாக இருக்கும். சுண்டைக்காய் சட்னி செய்து பயன்படுத்தலாம். இதற்கு சுண்டைக்காய், தக்காளி, செத்தல் மிளகாய், பழப்புளி, உள்ளி, கறிவேப்பிலை, தேவையான அளவு உப்பு எடுத்துக் கொண்டு, ஒரு வாணலியில் சிறிது நல்லெண்ணெய்விட்டு சுண்டைக் காயை வதக்கி எடுத்துவிட்டு, மிகுதி எல்லாவற்றையும் எண்ணெயில் வதக்கி உப்பையும் சேர்த்து மீண்டும் சுண்டக்காயை மீண்டும் சேர்த்து வதக்கி அடுப்பை நிற்பாட்டி தேங்காய் துருவலையும் சேர்த்து மிக்ஸியில் அரைத்து சாதத்துடன், இட்லி, இடியப்பம், போன்றவற்றுடன் சேர்த்து உணவாக பயன்படுத்தலாம். சுண்டைக்காயில் நார்ச்சத்து, உயிர்சத்து B,C நிறைந்துள்ளன. குறிப்பாக, பருப்புடன் சேர்த்து சமைத்து சாப்பிடும் போது குடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் சிறந்தது.

நார்ச்சத்து அதிகம் இருப்பதால் செரிமானத்தை மேம்படுத்தி மலச்சிக்கலைப் போக்கும். குழந்தைகளுக்கு வாரத்திற்கு இருமுறை பருப்புடன் சுண்டைக்காய் சேர்த்துக் கொடுத்தால் வயிற்று பூச்சிகள் அழியும்.

இரத்தத்தை சுத்திகரிக்கக்கூடியது. அத்துடன் இரத்தத்தில் சீனியின் அளவை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது. தோல்களில் ஏற்படும் அரிப்பு, வீக்கம் மற்றும் தொற்றுக்கள் போன்ற பிரச்சினைகளை குறைக்க கூடியது. மேலும் சுண்டைக்காயில் கல்சியம், புரதச்சத்து, இரும்புச்சத்து ஆகியவை அதிகமாக இருக்கிறது. சுண்டைக்காயில் பினைல்கள், குளோரோஜெனின்கள் போன்ற ஆக்சிஜனேற்ற பண்புகள் அதிகமாக இருக்கின்றன.

இவை இரைப்பையில் ஏற்படும் அழற்சி அல்லது பாதிப்பினைக் குறைத்து வயிற்றில் அதிகபடியான அமிலச் சுரப்பு ஏற்படாமல் தடுக்கிறது.

சுண்டைக்காய்கள் கசப்பாக இருந்தாலும், அதிகளவான ஆரோக்கிய நன்மைகளை தருகிறது. இதை சமைக்கும் விதத்தில் மிகச் சுவையான உணவாகவும் மாறிவிடுகிறது.

வயிற்றுக் கோளாறு, செரிமான மின்மை, வயிற்றுப்பிசம், மந்தம் போன்ற கோளாறுகள் இருந்தால் சுண்டைக் காய்கள் நல்ல மருத்துவ பலனாக அமையும். எலும்புகளை வலுவாக்கும். கல்சியம் சத்துக்கள் அதிகமாக இருப்பதால் எலும்புத் தேய்மானம், எலும்பின் உறுதித் தன்மை இழக்காமல் இருக்க சுண்டைக்காயை நீங்கள் உணவாக பயன்படுத்தலாம். பிஞ்சு சுண்டைக்காய்களை குழம்பு அல்லது துவையல் செய்து சாப்பிடும் போது நெஞ்சுசளியை குறைக்கும் ஆற்றல் உண்டு. சுண்டைக்காய்கள் நுண் ஊட்டச் சத்துக்களின் சேமிப்பு வங்கி என்றே கூறலாம். உடலிலுள்ள கெட்ட கிருமிகளை அழிப்பதிலிருந்து கெட்ட கொழுப்பை கரைப்பது வரை மருத்துவக்குணங்கள் நிறைந்தனவாகும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சுண்டைக்காய்களில் இருக்கும் தையமின், ரைபோபிளேவின் போன்ற சத்துக்கள், வாய்ப்புண்களையும், வாய்த் துர்நாற்றத்தையும் நீக்கும் ஆற்றல் உண்டு.

சித்த மருத்துவத்தில் பல மருந்துகள் தயாரிப்பதற்கு இதனை பயன்படுத்துகிறோம். பிரசவித்த பெண்களுக்கு பத்திய சாப்பாட்டின் முக்கியமான ஒன்று சுண்டைக்காய்களாகும்.

அத்துடன் தாய்ப்பால் சுரப்பை அதிகப்படுத்தும் பண்புகளும் இதற்குண்டு. இதன் கசப்பை நீக்க சுண்டைக்காய்களை தட்டி விதைகளை நீக்கியும் பயன்படுத்தலாம். சுண்டைக்காய்களை சாப்பிடும் போது இரவில் தூக்கம் சீராகவும் அமைகிறது. சுண்டைக்காய்களுக்கு பங்கசு தொற்று, பக்ரீறியாத் தொற்றுக்களுக்கு எதிராக தொழிற்படும் ஆற்றல் உண்டு.

ஆன்டி ஒக்சிடன் சத்துக்களும் இருப்பதால் புற்று நோய்க் கலங்களுக்கு எதிராக செயற்படும் ஆற்றலும் உண்டு. விலை அதிகம் கொடுத்து வாங்கும் காய்கறிகளை விட இலகுவாக, மலிவாக கிடைக்கும் சுண்டக்காய்கள் அதீத மருத்துவப் பண்புகளும் நிறைந்தன. Good things come in small packages. அதாவது உருவத்தில் சிறிய சுண்டைக்காய்கள் உடலிற்கு சிறந்த ஆரோக்கியத்தைக் கொடுக்கக்கூடியது.-

# இராசிபலன்

29.12.2025
மார்கழி 14 , திங்கட்கிழமை
தசமி பின்னிரவு 4.00 மணி வரை
அச்சுவினி பின்னிரவு 2.45 மணிவரை

சுபநேரம் -12.28-1.58 மணிவரை
இராகுகாலம் 7.58-9.28 மணிவரை
கெற்போட்டம் ஆரம்பம்

சந்திராஷ்டமம்-
அத்தம்

வளவன்




கனவுப்பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்.




மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு.




பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அதிஷ்ட வாய்ப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.




தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், சேமிப்பில் சிறிது கரையலாம், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்,பேச்சில் இனிமை தென்படும், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும், வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் கூடும்.




விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், எண்ணங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.




பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், குடும்ப பொறுப்புக்கள் கூடும், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பயணங்களின் போது நிதானம் தேவை.




இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், எதிர் பாராத தனவரவுகள் வந்து சேரலாம், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.

பல எண்ணங்கள் இருப்பின் ஒரு நல்ல எண்ணம் பிறக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 944





ஆனால் எதிர்பார்த்தபடி ஒன்றும் நடக்கவில்லை. பெரியவர்களுக்கு அடங்கி நடப்பதற்குப் பதிலாக கரிகாலன் பெரியவர்களை அதட்டி உருட்டி அதிகப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தான். அவனுடைய கேலிப் பேச்சுக்களையும் இரு பொருள் கொண்ட மொழிகளையும் பழுவேட்டரையரால் பொறுக்க முடியவில்லை. முக்கியமாக அவரைப் பற்றிக் கரிகாலன் அடிக்கடி வயதான கிழவர் என்று குறிப்பிட்டதும், இளைய ராணியைப் பாட்டி என்று அழைத்து வந்ததும் கூரிய விஷந் தோய்ந்த பாணங்களைப் போல் அவரைத் துன்புறுத்தி வந்தன. போதும் போதாதற்குச் சம்புவரையரின் போக்கும் அவ்வளவு திருப்திகரமாயில்லை. தமக்குப் பக்கபலமாக நின்று கரிகாலனுடைய அதிகப் பிரசங்கத்தை அடக்க முயல்வதற்குப் பதிலாகச் சம்புவரையர் பெரும்பாலும் வாயை மூடி மௌனம் சாதித்துக் கொண்டிருந்தார். ஏதாவது பேசினாலும் தயங்கித் தயங்கி வழவழா குழகுழா என்று பேசினார். கரிகாலன் தமது மாளிகைக்கு விருந்தாளியாக வந்து விட்டபடியினால் ஏதாவது ஏடாகூடமாய் நடந்து விடக் கூடாதென்று அப்படி ஜாக்கிரதையாக நடந்து கொண்டிருக்கிறார் போலும்! காரணம் எதுவாயிருந்தாலும் சம்புவரையரின் போக்கு கொஞ்சங்கூடப் பழுவேட்டரையருக்குத் திருப்திகரமாக இல்லை.

இன்றைக்குக் கரிகாலன் கூறியதில் எவ்வளவு தூரம் உண்மையான பேச்சு, எவ்வளவு தூரம் கேலிப் பேச்சு, எவ்வளவு தூரம் மனதில் ஒன்று உதட்டில் ஒன்றுமான வஞ்சகப் பேச்சு என்பதைக் கண்டு கொள்வதும் எளிதாயில்லை. மதுராந்தகனையும் அங்கே வரவழைத்த பிறகு ஏதேனும் பெரிய விபரீத காரியம் செய்ய உத்தேசித்திருக்கிறானோ என்னமோ, யார் கண்டது? மலையமானைப் பெரும் சைன்யத்துடன் படையெடுத்து வரச் செய்து கடம்பூர் மாளிகையை வளைத்துக் கொள்ளும்படி செய்தாலும் செய்யலாம் அல்லவா?

இவையெல்லாவற்றையும் எண்ணும்போது தஞ்சாவூருக்குத் திரும்பிப் போய்விடுவதே நல்லது. சின்னப் பழுவேட்டரையன் நல்ல மதியூகி. அவனிடமும் யோசனை கேட்டுக் கொள்ளலாம். ஒரு வேளை மதுராந்தகனை இங்கு அழைத்து வருவதாயிருந்தாலும் எல்லா நிலைமைக்கும் ஆயத்தமாகக் காலாந்தக கண்டனைப் பெரிய படை திரட்டிக் கொள்ளிடக் கரையில் கொண்டு வந்து வைத்திருக்கச் செய்யலாம். எது எப்படியானாலும் இளைய ராணியை இங்கே இனி மேல் இருக்கச் செய்து இந்த மூடர்களின் கேலிப் பேச்சுக்கு உள்ளாக்குவது கூடவே கூடாது. அவளை அழைத்துக் கொண்டு போய்த் தஞ்சாவூரில் விட்டுவிடுவது மிக்க அவசியம். அதற்கு ஒரு வசதி இப்போது ஏற்பட்டிருக்கிறது அதைக் கைவிடுவானேன்?


இவ்விதம் ஒரு முடிவுக்கு வந்ததும் பெரிய பழுவேட்டரையருக்குச் சிறிது உற்சாகம் உண்டாயிற்று. முக மலர்ச்சியுடனே நந்தினியின் அந்தப்புரத்தை அடைந்தார். அங்கே அவர் வாசற்படியருகில் வந்த போது உள்ளேயிருந்து கலகலவென்று சிரிப்புச் சத்தம் வருவதைக் கேட்டார். ஏனோ அந்தச் சிரிப்பின் ஒலி அவருக்கு எரிச்சலை உண்டாக்கிற்று.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## வேடங்கள் நிலைப்பதில்லை



ஒரு ஏரியில் நிறைய மீன்களும் பாம்புகளும் வாழ்ந்து வந்தன. முதலில் நட்பு பாரட்டி இந்த இரண்டு இனங்களும் வாழ்ந்து வந்தன. பருவமழை பொய்து ஏரி வற்ற ஆரம்பித்ததும் இடத்துக்குச் சண்டை போட்டு ஏரியைப் பிரித்துக் கொண்டு வாழ்ந்தன.

ஒரு இனம் வாழும் இடத்திற்கு மற்றொரு இனம் போகக் கூடாது. மீறினால் எதிரியின் கையில் சரியான உதை கிடைக்கும்

இதில் ஒரு விலாங்கு மீன் மட்டும் தந்திரமாக வேடம் போட்டு ஏரி முழுவதும் சுற்றி வந்து கொண்டிருந்தது.

பாம்புகள் இடத்திற்குப் போகும் போது விலாங்கு தன் நீண்ட உடலையும் பாம்பு போன்ற தலையையும் வைத்து தான் ஒரு பாம்பு என்று காட்டிக் கொள்ளும்.

மீன்களின் இடத்திற்குப் போகும் போது உடலைச் சுருட்டி மீன் போன்ற துடுப்புகளையும் வாலையும் காட்டி தான் ஒரு மீன் என்று காட்டிக் கொள்ளும்.

இப்படி ஏமாற்றியே பொழுதை ஓட்டிக் கொண்டு இரண்டு இடங்களிலும் உணவு பெற்று ஏரி முழுவதும் சுற்றித் திரிந்து வந்தது விலாங்கு.

வெயில் காலம் அதிகமானது. ஏரி மேலும் வற்றியது. பாம்புக் கூட்டமும் மீன் கூட்டமும் தங்கள் இடங்களை நெருக்கியும் குறுக்கியும் அமைத்துக் கொண்டே வந்தன.

ஒரு நாள் இரண்டு கூட்டங்களும், ஒன்றின் இருப்பிடத்தை இன்னொன்று பார்த்துக் கொள்ளும் தூரத்தில் அமைக்கும் நிலை வந்தது.

அப்போது மீனாக விலாங்கு வேடம் போட்டால் பாம்புகள் பார்த்து தாக்கின. பாம்பாக வேடம் போட்டால் மீன்கள் கடித்துக் குதறின.

"நான் பாம்பும் அல்ல மீனும் அல்ல" விலாங்கு என்று கதறியது. நம்புவாரில்லை. விலாங்கு "முதலிலேயே உண்மையைச் சொல்லி யிருக்கலாமோ" என்று நினைத்துக் கொண்டு செத்தே போனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன்? எதற்கு? எப்படி? எனும் கேள்விகளிலிருந்து விடுபடுவதே சூழ்நிலைகளை சுலபமாய்க் கையாளும் வழி. - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## திட்டமிடல் இல்லாத செயற்பாடு - குருட்டுத்தனம் செயற்பாடு இல்லாத திட்டமிடல் - மலட்டுத்தனம்

நடிகர் விஜயின் சர்க்கார் என்ற திரைப்படத்தில் குறித்துரைக்கப்பட்ட உரையாடல் தொடர்பில் அனைவரதும் கவனத்தை ஈர்க்க விரும்புகிறோம்.

அந்தப் படத்தில் நடிகர் விஜய் வெளிநாட்டிலிருந்து தமிழகத்துக்கு வருகிறார். அவரை ஒரு காரில் ஏற்றி வருகின்ற சாரதி அவருடன் கலந்துரையாடுகிறார்.

ஒரு பெண் பிள்ளைக்கு நடந்த கொடுமையை அந்தச் சாரதி கூறும்போது, அந்தப் பிரச்சினை தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்வு என்ன என விஜய் சாரதியிடம் வினவுகிறார்.

அதற்கு சாரதி; இங்கு (தமிழ்நாடு) பிரச்சினைக்குத் தீர்வு தேவையில்லை. இன்னொரு பிரச்சினைதான் தேவை. புதிய பிரச்சினையால் முன்னைய பிரச்சினை அப்படியே அடிபட்டுப் போய்விடும் எனக் கூறுகிறார்.

ஆம், ஒரு திரைப்படத்தில் ஒரு சில நிமிடங்களுக்குள் நடந்த அந்தச் சம்பாசனை சமகாலத்தின் யதார்த்தத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

ஆம், சர்க்கார் படத்தில் இடம்பெற்ற அந்தக் கருத்தாடல் எங்களுக்கு மிகவும் பொருத்தமானது.

நாங்களும் பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தேடுவதில்லை. மாறாக இன்னொரு பிரச்சினைக்காகக் காத்திருக்கின்றோம். இது தான் எங்கள் நிலைமை. இதற்குப் பல காரணங்களைக் கூறமுடியும்.

அதில் ஒன்று கடமைகளை – பணிகளை – பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்கின்ற மனநிலையில், பிரச்சினைகளைச் சம்பாசிப்பதில் காலத்தைக் கடத்துகின்றோம்.

இதனால் எங்களின் அத்தனை திட்டமிடல்களும் செயற்பாடுகளும் வீணாகிப் போகின்றன.

உண்மை. மக்களின் தேவை பற்றிச் சிந்திக்காமல், கிடைத்த நிதியைச் செலவழித்துவிட்டால் போதும் என்ற மனநிலையில் அரச திணைக்களங்கள் செயற்படுவதன் காரணமாக எல்லாமும் வீணாகிப் போகிறது.

ஆம், எங்கள் வட மாகாணத்தின் கடந்த கால வேலைத்திட்டங்களை உற்றுநோக்குவோமாயின், பயனற்ற பல காரியங்கள் நடந்தாகியுள்ளன.

வடக்கில் அமையப்பெற்ற சில கட்டிடங்கள் பயனற்றுப் பாழடைந்து போகின்றன. குடிநீருக்கென வெட்டப்பட்ட பொதுக்கிணறுகள் கூட தேவையற்றுக் கிடக்கின்றன.

அதேநேரம் கட்டிடம் தேவைப்படுகின்ற அமைப்புகளுக்கு – குடிநீருக்காக ஆற்றலைகின்றவர்களுக்கு அந்த வளம் கிட்டவும் இல்லை. கிடைக்கவும் இல்லை.

இதையும் கடந்து, நிறைவேற்றப்பட்ட வேலைத்திட்டங்களின் தரம்பற்றிய எங்களின் சான்றிதழ்கள் உச்சமாக இருக்கின்றன.

ஆனால் நாளடைவில் அவை சேதமுறுகின்றன என்றால், வழங்கப்பட்ட தரச் சான்றிதழ் எப்படியானதென்பது தெரிகிறதல்லவா.

உதாரணத்துக்கு நல்லூர் அரசடி வீதியை ஒருக்கால் சென்று பாருங்கள். காபற் வீதியாக அமைக்கப்பட்ட அரசடி வீதி இப்போது முற்றுற சேதமடைந்து போயிற்று.

ஆக, அந்த வீதி அமைக்கப்பட்டபோது அதற்கான மேற்பார்வை எப்படியானதென்பது இப்போது தெரிகிறதல்லவா?

இங்குதான் திட்டமிடல் இல்லாத செயற்பாடு குருட்டுத்தனம். செயற்பாடு இல்லாத திட்டமிடல் மலட்டுத்தனம் என்ற அறிஞர் ஸ்ரீபனின் கருத்து நினைவுக்கு வருகிறது.

# வெடிகுண்டுப் புரளியால் அல்லோலப்பட்ட கட்டுநாயக்க

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வந்து கொண்டிருந்த கட்டார் ஏர்வேஸ் விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாகக் கூறி நேற்று ஞாயிற்றுக்கிழமை (28) டோஹாவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலைய முகாமையாளருக்கு மின்னஞ்சல் மூலம் தகவல் அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட முழுமையான சோதனைகளில் விமானத்தில் எந்தவித வெடிகுண்டும் கண்டுபிடிக்கப்படவில்லை என விமான நிலைய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

கட்டார், டோஹாவிலிருந்து வந்த கட்டார் ஏர்வேஸ் Q.R.-664 விமானம் நேற்றுக்காலை 08.27 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியது. போயிங் 787 ட்ரீம்லைனர் வகையைச் சேர்ந்த குறித்த விமானம் 245 பயணிகளையும் 12 பணியாளர்களையும் ஏற்றி வந்திருந்தது.

விமானம் தரையிறங்குவதற்கு முன்பே, அதில் வெடிகுண்டுகள் இருப்பதாகக் கூறி விமான நிலைய முகாமையாளருக்கு மின்னஞ்சல் அனுப்பப்பட்டிருந்தது.

இதனையடுத்து விமானம் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் தரையிறக்கப்பட்டு, நைகந்தப் பகுதியில் உள்ள தனிமைப்படுத்தப்பட்ட வாகன நிறுத்துமிடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அனைத்துப் பயணிகளும் மற்றும் பணியாளர்களும் பாதுகாப்பாக இறக்கிவிடப்பட்டதுடன், விமான நிலையத்தின் வெடிகுண்டு செயலிழப்புப் பிரிவு அதிகாரிகள் மற்றும் வெடிபொருட்களை கண்டறிய விசேட பயிற்சி பெற்ற நாய்களின் உதவியுடன் முழு விமானமும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

சோதனைகளில் எவ்வித சந்தேகப் பொருட்களும் கண்டுபிடிக்கப்படாததைத் தொடர்ந்து விமானம் மீண்டும் விமான நிலையத்தின் பொது விமானப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இவ்விமானம் நேற்று காலை 10.15 மணிக்கு மீண்டும் டோஹாவிற்கு புறப்பட திட்டமிடப்பட்டிருந்த நிலையில், பாதுகாப்புச் சோதனைகளின் காரணமாக தாமதமடைந்து நேற்று மதியம் 01.07 மணிக்கே தனது பயணத்தை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# கடலலையில் அள்ளுண்ட ரஷ்யப் பிரஜை மீட்பு

*(அஹுங்கல்ல)*

அஹுங்கல்லப் பகுதியில் கடலில் நீராடிய வேளை கடலலையில் அள்ளுண்டு செல்லப்பட்ட ரஷ்ய சுற்றுலாப் பயணி பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளார்.

கடற்கரையில் உயிர் காக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் சார்ஜென்ட் கப்பில, பிரியசாந்த, பொலிஸ் கான்ஸ்டபிள் லசந்த மற்றும் எரந்த ஆகியோர் குறித்த ரஷ்யப் பிரஜையை மீட்டு முதலுதவி அளித்துக் காப்பாற்றியுள்ளனர்.

இச் சம்பவம் சமூக வலைத்தளங்களில் பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. *(ந-7)*

# கட்டுத்துப்பாக்கி வெடித்து ஒருவர் பலி

*(மதவாச்சி)*

அநுராதபுரம் மதவாச்சிப் பகுதியில் கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மதவாச்சி பொலிஸ் பிரிவின் உடும்புகலவத்த பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (28) ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மதவாச்சிப் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 28 வயதுடைய இளைஞர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த நபர் விவசாயக் காணியில் அவரால் கட்டப்பட்ட கட்டுத்துப்பாக்கியில் சிக்கியே உயிரிழந்துள்ளார் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சடலம் வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். *(ந-7)*

# காட்டு யானையுடன் வான் மோதி விபத்து

ஹபரண-திருகோணமலை பிரதான வீதியில் 124 ஆவது கிலோமீற்றர் தூண் அருகே காட்டு யானையுடன் வான் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் வானின் சாரதி மற்றும் பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் ஹபரண மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள அதேவேளை விபத்தில் சிக்கிய காட்டு யானை உயிரிழந்துள்ளது.

கவுடுல்ல தேசிய பூங்காவிலிருந்து ஹுருலு சுற்றுச்சூழல் பூங்காவிற்குச் செல்லும் பிரதான வீதியை யானை கடக்க முற்பட்ட போதே இவ் விபத்துச் சம்பவித்துள்ளது.

விபத்தில் உயிரிழந்த யானை சுமார் 12 வயதும் 5 அடி உயரமும் கொண்டது.

கவுடுல்ல வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் ஹதரஸ்கோட்டை பொலிஸார் சம்பவம் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். *(ந-7)*

# அதிவேக ரயிலுடன் மோதுண்ட மகிழுந்து

## மூவர் படுகாயம்

*(கொஸ்கம)*

கொஸ்கம - பியகம பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (27) பெலியத்தயிலிருந்து மருதானை நோக்கிப் பயணித்த அதிவேக ரயிலுடன் கார் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் மூன்று பேர் படுகாயமடைந்த நிலையில் பலப்பிட்டிய மற்றும் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சமிக்ஞை விளக்கு ஒளிர்ந்து, பாதுகாப்பு மணி ஒலித்துக் கொண்டிருந்தபோது அதனைப் பொருட்படுத்தாது கார், ரயில் மார்க்கத்தில் நுழைந்ததாகத் தெரியவந்துள்ளது.

இதன்போது ரயில் மோதி கார் தூக்கி வீசப்பட்டுள்ளதோடு காரில் இருந்த தந்தை, மகன் மற்றும் உறவினர் என மூவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துக் குறித்து கொஸ்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். *(ந-7)*

# 53 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கைது

(கொழும்பு)

"முழு நாடுமே ஒன்றாக" என்ற தொனிப் பொருளின் கீழ் நாடு தழுவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் இது வரை மொத்தமாக 53,737 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

54,239 சோதனைகளில் இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கைது செய்யப்பட்டவர்களில் 1,192 நபர்கள் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பாக 50 சந்தேக நபர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர். களில் 1,205 நபர்கள் மறுவாழ்வுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் – 2026



**உற்சாகமான மேஷ இராசியினருக்கு இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

பிறக்கப் போகும் 2026 ஆம் ஆண்டு மேஷ இராசியினருக்கு இலாபத்தை ஏற்படுத்தித் தரக்கூடிய ஆண்டாக அமையப் போகிறது. இந்த ஆண்டின் கிரக நிலவரங்கள் மேஷ இராசிக்கு மிக சாதகமாக இருப்பதால் உற்சாகமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் வாழ்க்கையை நடத்துவதில் நிலவிய சங்கடங்கள் அகலும். உங்களின் முயற்சிகள் வெற்றி வாய்ப்பை அள்ளித் தரும். சில சில சங்கடங்கள் வந்தாலும் அவற்றை உங்கள் திறமையால் சரி செய்து முன்னேற்றம் அடைவீர்கள்.

**குருவின் சஞ்சார பலன்கள்**

2026 ஆம் ஆண்டு தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு மூன்றாம் இடமான வெற்றி ஸ்தானத்தில் குருபகவான் சஞ்சரிக்கப் போகிறார். 2026 ஜீன் மாதம் 2 ஆம் திகதி முதல் 4 ஆம் இடமான சுகஸ்தானத்திற்கு செல்கிறார். இது உங்களுக்கு இழந்ததை மீட்டுத் தரக்கூடிய அமைப்பாகும். தடைப்பட்ட பாக்கியங்கள் தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் முயற்சிக்கும் உகந்த அற்புதமான நேரம். முன்னோர்களின் நல்லாசியால் பூர்வ புண்ணிய பலத்தால் சொத்துத் தகராறுகள் அகலும். திருமணம், குழந்தை பாக்கியம், வீடு, வாகனம் என அவரவர் வயதிற்கேற்ற சுப பலன்கள் உண்டு. பங்குச் சந்தை ஆதாயம் உண்டு. உடல் ஆரோக்கியம் அதிகரிக்கும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல கம்பனியில் வேலை கிடைக்கும்.

சிலருக்கு அரசு உத்தியோக வாய்ப்புத் தேடி வரும். பொருளாதாரத்தில் நிலவிய சிக்கல், சிரமங்கள் விலகி பொருள் வரவு அதிகரிக்கும். வராதகடன்கள் வசூலாகும். கடன் சுமை குறையும். அடமானப் பொருட்களை மீட்கக் கூடிய சந்தர்ப்பம் அமையும். சொத்துக்கள் சேர்க்கை அதிகமாகும். வாடகை வருமானம் தரக்கூடிய சொத்துக்கள் சேரும். சொத்துக்களின் மதிப்பு உயரும். ஆரோக்கியத்தில் நிலவிய பாதிப்புகள் அகலும். திருமணம், குழந்தை பாக்கியத்தில் நிலவிய தடைகள் அகலும். பெண்களுக்கு தாய் வழியில் சொத்துக்கள், பணம், நகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**சனியின் சஞ்சார பலன்கள்**

2026ஆம் ஆண்டு முழுவதும் சனிபகவான் உங்கள் ராசிக்கு 12 ஆம் இடமான விரய ஸ்தானத்தில் நின்று விரயச் சனியாக பலன் தருவார்.

இது மேஷ இராசிக்கு ஏழரைச் சனியின் காலமாகும். தடைகள் தகரும் வாரம். பொதுவாக இராசி மற்றும் லக்னத்திற்கு அசுப கிரகங்களான சனி, ராகு, கேது, செவ்வாய் சம்பந்தம் இல்லாமல் இருப்பது நல்லது. கடந்த காலங்களில் இராசியை சனி பார்த்ததால் ஏற்பட்ட சங்கடங்கள் அதிகம். தற்போது ஏழரைச் சனி தொடங்கினாலும் சனியின் பார்வை இராசியில். பதிந்த காலத்தில் ஏற்பட்ட

## இலாபத்தை தரக்கூடிய ஆண்டாக அமையும்

துன்பத்துடன் ஒப்பிட்டால் எதுவும் நடக்காதது போல் இருக்கும். எனவே மனதை அலட்டாமல் நேர்மையுடன், நியாயத்துடன் செய்யக் கூடிய அனைத்து முயற்சிகளும் வெற்றியடையும். தடைகள் தகரும்.

இதுவரை இருந்து வந்த சகோதர, சகோதரி பிணக்குகள் இருந்த இடம் தெரியாமல் மறையும். நல்ல வரன்கள் தேடி வரும். வாழும் கலையை உணர்ந்த உங்களை எந்த வினையும் பாதிக்காது. அனைத்து செயலிலும் நிதானம் மற்றும் பொறுமை மிக முக்கியம். நேர் மறையான எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். மாணவர்கள் அதிக கவனத்துடன் படிக்க வேண்டிய காலமாகும். கல்வி கற்கும் மாணவர்களின் படிப்பில் முன்னேற்றமான சூழ்நிலைகள் உண்டாகும்.

**ராகு/கேதுவின் சஞ்சார பலன்கள்**

2026ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் கேது பகவானும் லாப ஸ்தானத்தில் ராகு பகவானும் சஞ்சரிப்பார்கள்.

5.12.2026 முதல் சுக ஸ்தானத்தில் கேது பகவானும் தொழில் ஸ்தானத்தில் ராகு பகவானும் சஞ்சரிப்பார்கள். ஒரு ஜாதகத்தில் பணபர ஸ்தானம் என்பது 2, 5, 8,11 ஆம் இடங்களாகும். தற்போது கோச்சாரத்தில் 11 ஆம் இடத்தில் நிற்கும் ராகு பகவான் ஆண்டு முழுவதும் உங்களுக்கு தேவையான பொருளாதாரத்தை வழங்கக் காத்திருக்கிறார். பாதியில் அரைகுறையாக நின்ற அனைத்துப் பணிகளும் துரிதமாகும். அண்ணன் தம்பிகளுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் நீங்கும். திட்டமிட்டபடி பாகப்பிரிவினைகள் சுமூகமாகும். தொழில் சார்ந்த வெற்றிகள் தேடி வரும். பிறவிக் கடன் மற்றும், பொருள் கடனிலிருந்து விடுபடுவீர்கள். பெயர், புகழ், அந்தஸ்து, கடவுள் நம்பிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் விரும்பிய மாற்றங்கள் உண்டாகும்.

பூர்வீகத்தில் புதிய அசையா சொத்துக்கள் வாங்கும் வாய்ப்புகள் உண்டு. சில பிள்ளைகள் கல்விக்காக விடுதிக்குச் செல்வார்கள். பெண்களுக்கு தந்தையின் பூர்வீக வீடு, பங்களா கிடைக்கும். தம்பதிகளிடம் ஒற்றுமை உணர்வு மேலோங்கும். திருமண முயற்சி கைகூடும். மறுமணத்திற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. அரசு ஊழியர்களுக்கு கூடுதல் பொறுப்புகள், பணிச் சுமையால் மனச் சஞ்சலம் உண்டாகும். பெண்களுக்கு ஆரோக்கிய குறைபாடு அகலும்.

**அசுவினி**

மேஷ இராசி அசுவினி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு அறிவாற்றல் மெருகேறும். வெகு விரைவில் வளமான எதிர்காலம்




ஏற்படும்.

உணர்வு பூர்வமாக செயற்படாமல் நிதானத்துடன் செயற்பட வேண்டும். உங்களுக்கு எதிராக செயற்படுபவர்களிடமிருந்து விலகி இருப்பது நல்லது. குடும்பத்தில் நிலவிய சிறு சிறு குழப்பங்கள் மறையும். உற்றார் உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். நெருக்கடிகள் விலகும். சமூக அந்தஸ்து உயரும். தடைகள் தகர்ந்து முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் கூடி வரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பணவரவு அதிகரிக்கும் பொற்காலம் என்றால் அது மிகையாது. அடமான நகைகள் மீண்டு வரும். தேவையான உதவிகள் விரும்பிய இடத்திலிருந்து கிடைக்கும். வயதானவர்களுக்கு அரசின் உதவித் தொகை கிடைக்கும். உடன் பிறந்தவர்களின் சுப காரியங்களை முன்னின்று நடத்தும் கடமையும் தொழில், உத்தியோகம் அனுகூலம் இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தரும். தலைமை பொறுப்பில் இருப்பவர்கள் திருமண வாய்ப்புகள் கூடிவரும். நோய்த் தாக்கம் குறையும். வெளி நாட்டு வாய்ப்பு தேடி வரும்.

விநாயகர் வழிபாட்டால் இன்பங்களை அதிகரிக்க முடியும். பசுவிற்கு அகத்திக்கீரை தானம் வழங்க நன்மைகள் அதிகரிக்கும்.

**பரணி**

நம்பிக்கை அதிகரிக்கும் வருடம். உங்கள் செயற்பாடுகள் வெற்றிகரமாக அமையும். அதிஷ்டமும், பேரதிஷ்டமும் உங்களை வழி நடத்தப் போகிறது. வீட்டில் சுப காரியப் பேச்சுவார்த்தைகள் நடக்கும். ஆடம்பரச் செலவை குறைத்து எதிர் நீச்சல் போட்டால் வெற்றி நடை போட முடியும். குடும்பத்தில் ஒற்றுமையும், அந்நியோன்யமும் உண்டாகும். திடீர் எதிர்பாராத பணவரவால் தேவைகள் அனைத்தும் நிறைவு பெறும். தொழில் சீராக நடந்தாலும் இலாபம் நிற்காது. அதிக முதலீடுகள் கொண்ட தொழில் நடத்துபவர்கள் சற்று நிதானத்துடன் செயற்படவும்.

இதுவரை கடனை திரும்பத் தராத உறவுகள் கடனைச் செலுத்துவார்கள். பூமி, வீடு, வாகனம் வாங்கும் சிந்தனைகள் மேலோங்கும். தாய்வழிச் சொத்திற்காக தாய் மாமாவுடன் கருத்து வேறுபாடு, பகைமை உருவாகும் என்பதால் பேச்சில் நிதானம் தேவை. வழக்குகளை ஒத்தி வைப்பது நல்லது. அமைதியாக இருப்பது அவசியம். அமைதியால் அனைத்து பிரச்சினைகளும் அடிபட்டு போகும். ஆரோக்கியத்தில் முன்னேற்றம் அதிகரிக்கும். மாணவர்கள் ஞாபகசக்தியை அதிகரிக்கும் பயிற்சியைக் கடைபிடிப்பது நல்லது. கருமாரியம்மனை வழிபட் டால் மன நிம்மதி கூடும்.

**கிருத்திகை 1**

இழுபறிகள் குறையும். தொழிலில் நல்ல பணப்புழக்கம் இருக்கும். வர்த்தகம் இலாபத்து டன் நடக்கும். அதிஷ்டசாலியாக திகழ்வீர்கள்.

பூர்வீகச் சொத்து தொடர்பான இழுபறிகள் நீங்கும். உங்களுக்கு சேர வேண்டிய பாகப் பிரிவினை பங்கு சொத்தாகவோ, பணமாகவோ முழுமையாக வந்து சேரும். சிலர் பூர்வீகப் பங்குப் பிரிவினை பணத்தில் பழைய கடன்களை அடைத்து விட்டு புதிய வீடு, வாகனம் வாங்கலாம். சிலருக்கு மனைவி வழி சொத்தில் மாமனாருடன் நிலவிய கருத்து வேறுபாடு மாறும். தடைப்பட்ட வெளிநாட்டுப் பயணம், வேலை வாய்ப்பு கைகூடும். தொழிலில் நல்ல முன்னேற்றங்கள் இருக்கும்.

பெண்களுக்கு உயர் ரக ஆடம்பர ஆடை, பொருட்சேர்க்கை உண்டாகும். சகோதரரால் சகாயங்கள் உண்டாகும். கணவன் அல்லது மனைவிக்கு உத்தியோக ரீதியான மாற்றங்கள் உண்டாகும். நம்பிய வேலையாட்களால் சில அசௌகரியங்கள் உண்டாகும்.

தொழில் சார்ந்த அரசின் சட்ட திட்டங்களை, விதிகளை கடைபிடிப்பது அவசியம். விரலுக்கேற்ற வீக்கம் தான் இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டு அகலக்கால் வைப்பதைத் தவிர்க்க வேண்டும். சிதம்பரம் நடராஜரை வழிபட மேன்மையான பலன்கள் நடக்கும்.

**பரிகாரம்**

முருகனை வழிபடுவதால் மலை போல் வந்த துயரம் பனி போல விலகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள்...

நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2001ஆம் ஆண்டு அவரது தனிப்பட்ட பாவனைக்காக இராணுவத்தினால் வழங்கப்பட்ட துப்பாக்கி ஒன்று, 2019ஆம் ஆண்டு குற்றவாளியான மாகந்துர மதூஷிடம் இருந்து மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணைகளுக்காகவே முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த 26ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட அவர் 72 மணிநேர தடுப்புக்காவல் உத்தரவில் விசாரிக்கப்படும் நிலையில், நேற்று (28) கம்பஹா நீதிவானிடம் ஆஜர் படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு இராணுவத்தினால் வழங்கப்பட்ட ஏனைய துப்பாக்கிகள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதன்படி அவருக்கு வழங்கப்பட்டுள்ள மேலும் 19 துப்பாக்கிகள் குறித்து அந்தத் திணைக்களம் தற்போது விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## அவசர காலநிலை...

தும் அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் கையொப்பத்துடன் கூடிய அதிவிசேட வர்த்தமானி நேற்று (28) வெளியாகியுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலையைத் தொடர்ந்து இலங்கை முழுவதும் நடைமுறைக்கு வரும் வகையில், ஜனாதிபதியினால் பொது அவசர காலநிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

பொதுமக்களின் பாதுகாப்பு, நாட்டின் அமைதியைப் பாதுகாத்தல் மற்றும் அத்தியாவசிய சேவைகளைப் பேணுதல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## யாழில் சுற்றி...

பட்டுள்ளது.

இதன்போது ஆறு பெண்களும் இரண்டு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7,104)

## மாகாண...

எனவே மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படமாட்டாது என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தி வலுவாக இருந்தது.

அதனால்தான் உள்ளூராட்சி சபைகளில் வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிரணி உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினர்.

எனினும் இந்த அரசு ஓடாது, நிச்சயம் விழும் என எதிரணி உறுப்பினர்கள் நம்புகின்றனர். ஓராண்டு கடந்தும் உள்ளூராட்சி சபைகள் ஊடாக எவ்வித அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை.

இதனால்தான் எதிரணி உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களிக்கின்றனர். மக்கள் மத்தியில் இந்த அரசாங்கம் நம்பிக்கை இழந்து வருகின்றது.

எனவே மாகாண சபைத் தேர்தலை இந்த அரசு நடத்தாது. ஏனெனில் ஒரு சபையைக் கூட வெல்ல முடியாத நிலையே இந்த அரசுக்கு உள்ளது எனத் தெரிவித்துள்ளார். (ந-7)

## மின் ஒளியால்...

மின்விளக்குகள் இன்மையே முக்கிய காரணமாக அமைந்திருந்தது.

அந்தவகையில் இப்பிரச்சினைக்குத் தீர்வு தரும் பொருட்டு வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முயற்சியால் மாகாண அபிவிருத்தி நிதியில் இருந்து 9.3 மில்லியன் ரூபாவும் மற்றும் சபை நிதியில் இருந்து 0.428 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு, கல்லுண்டாய் வீதியில் மின்சார சபையினால் புதிதாக மின்கம்பங்கள் நாட்டப்பட்டு மின் குமிழ்கள் பொருத்தும் பணிகள் நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ந-7,104)

## யாழ். உள்ளக...

கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "உள்ளக விளையாட்டு அரங்கு தொடர்பான வழக்கு யாழ்ப்பாண நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகிறது.

நீதிமன்ற வழக்கு இடம்பெறுகின்ற காரணத்தினால் வழக்கு நிறைவடையாமல் கட்டுமானங்களை மேற்கொள்ள முடியாத நிலையில் குறித்த நிதியைக் கட்டடங்கள் திணைக்களத்துக்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற தீர்ப்பில் கட்டுவதற்குரிய உத்தரவு கிடைக்குமாயின் அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும். அல்லாவிட்டால் மாற்றுக் காணி ஒன்றைத் தேர்வு செய்து உள்ளக விளையாட்டு அரங்கினை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார்.(ந-7)

## பிரதம...

தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்ட இருவரின் பெயர்களையும் அரசியலமைப்பு சபை நிராகரித்துள்ள நிலையில், கடந்த 8 மாதங்களாக அந்தப் பதவி வெற்றிடமாகவே காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதும் கடமையாற்றும் பதில் கணக்காய்வாளர் நாயகம் தகுதியற்றவர் என்றால், அதற்கான காரணத்தை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும்.

2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரசியலமைப்பு சபையிலுள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகள் புதிதாக நியமிக்கப்பட வேண்டும். பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் இணக்கப்பாட்டுடன் இடம்பெற வேண்டிய இந்த நியமனங்களில், தமக்குச் சாதகமானவர்களை உள்வாங்க அரசாங்கம் முயற்சிக்கிறது.

அமைச்சின்கீழ் உள்ள நிறுவனங்கள், திணைக்களங்கள் மற்றும் "கிளீன் ஸ்ரீ லங்கா" போன்ற திட்டங்களுக்கான நிதி செலவிடப்பட்ட விதம் குறித்து 2026ஆம் ஆண்டிலேயே தணிக்கை செய்யப்படவுள்ளது.

இதன்போது அரசாங்கத்தின் ஊழல் மற்றும் முறைகேடுகள் வெளிப்படுவதைத் தடுக்கும் நோக்கிலேயே, தமக்கு விசுவாசமான ஒருவரைக் கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)


மஹஜன சம்பத — திகதி 2025.12.28 — சீட்டிழுப்பு இலக்கம் 6057 — Y 8 0 4 9 2 5
அத சம்பத — Y 4 9 2 5 — சீட்டிழுப்பு இலக்கம் 0632
சுப தவசக் — திகதி 2025.12.28 — சீட்டிழுப்பு இலக்கம் 173 — இடபம் 10 14 53 — 3189
தன நிதானய — திகதி - 2025.12.28 — சீட்டிழுப்பு இலக்கம் - 2087 — F 27 32 51 64 F
மெகா பவர் — திகதி 28/12/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2405 — C 18 09 65 68 75
ஜய — திகதி 2025.12.28 — சீட்டிழுப்பு இலக்கம் 0325 — S 6 1 4 1
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4299 — சீட்டிழுப்பு திகதி 28.12.2025 — P 01 61 67 68 — P
HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.12.28 — சீட்டிழுப்பு இலக்கம் 1366 — தனுசு 01 03 35 41 தனுசு
உத்தியோகபூர்வ முடிவுகள் — 28.12.2025 — வெற்றி வாரம் 0765 — V 7 2 9 1 8 7 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.31,513,748.40
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3031 — சீட்டிழுப்பு திகதி 2025.12.28 — ஞாயிற்றுக்கிழமை — 29 46 47 77 V — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,956,752.00
சனிதா — திகதி 28.12.2025 — வெற்றி வாரம் 5192 — 13 41 59 77 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,000,000.00
சசிரி — வெற்றி வாரம் 861 — சீட்டிழுப்பு திகதி 28.12.2025 — 03 45 49 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.2,000,000.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4743 — சீட்டிழுப்பு திகதி 28.12.2025 — ஞாயிற்றுக்கிழமை — 24 31 42 48 துலாம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,995,789.20
ஜய்க — R 31 22 31 65 72 — 2207 — 28.12.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.616,213,205.80
அத கோடிபதி ADA KOTIPATHI — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 2857 — சீட்டிழுப்பு திகதி 2025.12.28 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.71,900,498.40 — 07 36 39 59 B


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4691)

076 825 7716 (ஆகாஸ்)



## APSS INTERNATIONAL

No.188, K.K.S Road, Chunnakam.

**A/L Day classes**

2025 A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது.
கணித, விஞ்ஞான பிரிவுகள்
ஆரம்பம் 02.01.2026 (வெள்ளிக்கிழமை)

| | |
|---|---|
| **Biology**<br>திரு.S.நித்தியானந்தன்<br>(B.Sc, PGDE, M.Ed) | **Com.Maths**<br>திரு.M.கோணேஸ்வரா<br>(B.Sc, PGDE, M.Ed) |
| **Chemistry**<br>திரு.S.சிவசங்கர்<br>(B.Sc, PGDE) | **Physics**<br>திரு.V.பார்த்தீபன்<br>(B.Sc, PGDE) |

**அனுமதிகள்**
அலுவலக நேரம் : காலை 9.30 to 12.30
மாலை 3.30 to 6.30

- 2027 A/L கணித, விஞ்ஞானப் பிரிவுகளும் நடைபெறுகின்றன
- 10 வருடங்களுக்கு மேலான உயர்தரப் பரீட்சை மதிப்பீட்டில் அனுபவம் உடைய ஆசிரியர்குழாம் (C-4689)

Contact no: 0768976665, 0703010540, 0772568522



## Voyzant இந்தியா கோவில்கள்

ஆறுபடை வீடு, திருப்பதி, திருநாகேஸ்வரம், இராமேஸ்வரம், சிதம்பரம், ஸ்ரீரங்கம், வைத்தீஸ்வரன், மேல்மருவத்தூர், திருவண்ணாமலை, மதுரை மீனாட்சி, திருவெண்ணெய்நல்லூர், சங்கரப்பாணி, திருவானைக்கா, காஞ்சிகாமாட்சி, ராமர்கோவில், திருக்கடவூர்

உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்

189,000/= (ஒரு நபருக்கு) (10 பேர் கொண்ட குழு)

இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து — தங்குமிடம்

10 நாட்கள்

மேலதிக விபரங்களுக்கு: Voyzant (PVT) Ltd

புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026

No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.(OLR Church இற்கு அருகில்)

077 284 9535, 021 222 6866 (நிபந்தனைகளுக்குட்பட்டது) (6308)



## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் 05 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடிப் பாதையுடன்
- யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பிரதான வீதியில் அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமையில்
- அல்லைப்பிட்டி செல்லும் பிரதான வீதி காப்பற் முகப்புடன்
- அல்லைப்பிட்டி தேவாலயம் 100m தூரம்
- அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் 300m தூரம்
- அரச தனியார் போக்குவரத்து சேவைகள் இடம்பெறும் வீதி.
- வீடுகள் கட்டுவதற்கும், வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த காணி
- வீதி முகப்புடன் ஒரு பரப்பின் விலை 1,000,000/=, (பத்து லட்சம்)
- இரண்டாம் காணி ஒரு பரப்பின் விலை 900,000/=, (ஒன்பது லட்சம்)
- மூன்றாம் காணி ஒரு பரப்பின் விலை 800,000/=, (எட்டு லட்சம்)

பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை


தொடர்பு: 076 860 2770 / 076 987 8617 (1866)


## வரி நீக்கம்

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை (MRIA) சர்வதேச அளவில் ஊக்குவிக்கும் நோக்கில், அங்கிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் பயணிகளிடம் வசூலிக்கப்படும் விமான நிலையப் புறப்பாட்டு வரியை (Departure Tax) முழுமையாக நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி பயணிகளிடம் இது வரை வசூலிக்கப்பட்டு வந்த 60 அமெரிக்க டொலர் (USD 60) வரி இனி அறவிடப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந-7)

## 31 ஆம் நாள் நினைவுதின அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 22 . 06 . 1944

மறைவு 02 . 12 . 2025

கடந்த 02.12.2025 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் மயில்வாகனம் பாலசுந்தரம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை 30.12.2025 செவ்வாய்க்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 01.01.2026 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெற்று தொடர்ந்து 03.01.2026 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் திவ்ய மஹால் மண்டபத்தில் (1001, வண்ணார் பண்ணை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்) நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் பிரிவுத்துயர் கேட்டு தொலைபேசி மூலமாக, சமூக வலைத்தளங்களூடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலி உரைகள், பிரசுரங்கள், பதாதைகள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தேவையறிந்து செயற்பட்ட அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


06ம் ஒழுங்கை, 66/14 கருவப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (1855)

தகவல்:
குடும்பத்தினர்

## கண்ணீர் காணிக்கை

எமது நிலையத்தினதும் விளையாட்டுக் கழகத்தினதும் நிலையத்தின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டவரும் முன்னாள் போசகரும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் மேனாள் அதிபருமாகிய

### உயர்திரு. அப்பாத்துரை பஞ்சலிங்கம்



அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய கிருபாகர சிவசுப்பிரமணியனின் பாதாரவிந்தங்களைப் பணிகின்றோம்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும் (K.C.C.C & K.C.C.C.S.C) (C-4692)


## வேலைவாய்ப்பு

- ☐ முன்பள்ளி ஆங்கில ஆசிரியர் மற்றும் தமிழ் ஆசிரியர்
- ☐ முன்பள்ளி இணைப்பாளர்
- ☐ கணக்காளர் (HNDA முடித்தவர்கள்)
- ☐ பாடசாலை சுத்திகரிப்பாளர், பாதுகாவலர் (பெண்கள்)
- ☐ வாகன ஓட்டுனர் மற்றும் அலுவலக உதவியாளர் (35 வயதிற்குட்பட்ட ஆண்கள்)
- ☐ Ms Office, Photoshop, Pagemaker, Corel draw என அனைத்தும் தெரிந்தவர்கள். (ஆண்கள். பெண்கள்)

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்: Little Masters' Pre school சிவபதி, கே.கே.எஸ் றோட், இணுவில்.

நேர்முகத்தேர்வு நடைபெறும் திகதி: 30.12.2025 செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை நடைபெறும்.

தொடர்புகளுக்கு: 076 073 7397 (6401)



## வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
# 01 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி. யாழ்ப்பாணம்.
021 222 6113, 076 443 1576

**அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்**
# 10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536, 077 657 9349 (C4688)

- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்.
- 25 வருடங்களாக மக்கள் நம்பிக்கையை வென்ற நிறுவனம்.
- அனுப்பப்படும் பொதிகளுக்கு காப்புறுதி செய்ய வேண்டியதில்லை. முழுப் பெறுமதியையும் எமது நிறுவனம் பொறுப்பேற்கும்.
- உங்கள் வீடுகளுக்கு வந்து ஏற்றுக் கொள்ளப்படும் சேவைக்கு மேலதிக கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

கிளைகள்: # 01 தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி, # 01, பெற்றோ[illegible] பருத்தித்துறை. கொமர்ஷல் வங்கி அருகில் கிளிநொச்சி.


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.[illegible] பிறவுண் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org